# திருநெல்வேலி மாநகராட்சி

## 28.10.2024 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டப்பொருட்கள் விபரம் மற்றும் தீர்மானங்கள் விபரம்

### மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் எண்:299

1. பகுத்தறிவு தந்தை பெரியார் வழியில் ஏழைகளின் ஏந்தல் பேரறிஞர் அண்ணா வழியில் திராவிட இயக்கத்தை கட்டிக்காத்து வழிநடத்திட இந்திய திருநாட்டில் சமுகநீதி மதநல்லிணக்கம் பாதுகாக்கப்பட அயராது உழைத்திட்ட உத்தமர்.

ஐந்து முறை தாய்தமிழகத்தை அரசாட்சி செய்து தமிழ்நாட்டை உல அரங்கில் உயர்த்திய தனிப் பெருந்தலைவர்

பதினான்கு வயதில் தமிழ்க்கொடி ஏந்தி திருவாரூர் வீதியில் அன்னை தமிழ் காக்க அறப்போர் நடத்திய இலட்சியத்தலைவர்.

உலகின் மூத்த மொழியாம் தமிழ் மொழியை செம்மொழியாக்கி தாய் தமிழுக்கு பெருமை சேர்த்த தமிழனத்தலைவர்.

உலகெலாம் வாழுகின்ற தமிழ் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் வங்கக்கடலோரத்தில் இருந்து நம்மை வழி நடத்திக் கொண்டிருக்கும் தங்கத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் நெல்லை சீமையில் மாநகராட்சி வர்த்தக மையம் அமைந்துள்ள வணிக வளாகத்தில் திருநெல்வேலி மாநகராட்சி சார்பில் வென்கல முழு உருவச்சிலை அமைத்திட கோரியுள்ள பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.அப்துல் வஹாப் அவர்களின் கோரிக்கையினை ஏற்று சிலை அமைக்க **அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

### மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் எண்:300

2..திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் சுமார் 1.5.இலட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள் மேலப்பாளையம் இரயில் நிலையம் விரிவாக்கம் செய்து சிறப்பாக இயங்கி வருகிறது.

மேலப்பாளையம் மற்றும் சுற்று வட்டார பகுதியில் இருந்து வேலை நிமித்தமாக, கல்வி மருத்துவம், திருவனந்தபுரம் விமான நிலையம் போன்றவற்றிற்கு சென்னை, பெங்களூர் , கேரளா, போன்ற ஊர்களுக்கு சென்று வருகிறார்கள் எனவே மேலப்பாளையம் இரயில்நிலையத்தில் அனைத்து இரயில்களும் நின்று செல்ல மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், ஒன்றிய இரயில்வே அமைச்சகத்தையும் கேட்டு 44வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஹாபிஸ்.M.S. முகைதீன் அப்துல் காதர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று அதற்கு அனுமதி வழங்கி ஆவன செய்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், ஒன்றிய இரயில்வே **அமைச்சகத்தையும் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

---

## மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் எண்:301

3.வார்டு எண்:39ல் சிவந்திப்பட்டி சாலையில், தியாகராஜநகர் ரயில்வே மேம்பாலம் பணி நடைபெறுகிறது. மேற்கண்ட சாலையில் அன்புநகரில் இருந்து மகராஜநகர் வருவதற்கு முதல் Y வடிவ மேம்பாலம் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது நெடுஞ்சாலைத்துறை மூலம் மேம்பால பணி முடிந்த நிலையில் நெடுஞ்சாலைத்துறை மற்றும் ரயில்வே துறை மூலம் அன்புநகரில் இருந்து மகாராஜநகர் செல்லும் சாலையில் சுரங்கப் பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட அன்புநகர் காலனி அமைவதற்கு முன் ஏரிப்பகுதியாகும். அன்பு நகர் பகுதியில் சுரங்கப்பாதை அமைத்தால மழைக்காலங்களில் மழைநீர் முழுவதும் சுரங்கப்பாதையில் தேங்கி போக்குவரத்து தடைபடும் இதனால் புதிய பேரூந்து நிலைய பகுதியில் இருந்து அவசர கால ஊர்திகள் மற்றும் பள்ளி, கல்லூாரி அலுவலகம் செல்பவர் செல்ல முடியாத நிலை ஏற்படும் . மேலும் மகாராஜநகர் 17வது குறுக்குத்தெருவில் பாதாள சாக்கடை மெயின் லைன் மற்றும் குடிநீர் குழாய்கள் செல்கிறது. மேற்கண்ட சுரங்கபாதை அமைப்பதால் பொது மக்கள் கடும் நெருக்கடி உள்ளாக நேரிடும். ஆகையால் திருநெல்வேலி மாநகராட்சி சுரங்கப்பாதைக்கு அனுமதி வழங்காமல் Y வடிவ பாலம் அமைக்க தீர்மானமாக நிறைவேற்றி தமிழக முதல்வர் அவர்களுக்கு தெரியப்படுத்த

கோரி 39வது மாமன்ற உறுப்பினர் திருமதி.பா.சீதா அவர்களின் கோரிக்கையினை **ஏற்று அதற்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

---

## மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் எண்:302

**4.** திருநெல்வேலி நகராட்சி காலத்தில் நகராட்சிக்கு எதிர்புறம் வடக்கு பகுதியில் பல ஏக்கர் நிலம் கையகப்படுத்தி நகராட்சிக்கு நிரந்தர சொத்து ஏற்படுத்தியுள்ளார்.

தற்போது அந்த இடத்தில் மாநகராட்சியின் வருவாயினை பெருக்குவதற்காக ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் வர்த்தக மையம் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

இதனால் திருநெல்வேலி மாநகராட்சி மக்கள் மத்தியில் பொழுபோக்கிற்காக இடம் ஏதும் இல்லாமல் மிகவும் வேதனைப்படுகின்றனர். எனவே பொது மக்கள் நலன் கருதி இம் மாநகராட்சி வர்த்தக மையத்தின் வடக்கு புறத்தில் 10 ஏக்கர் நிலம் தனியாரிடமிருந்து கையகப்படுத்தி அதனை மாநகர மக்களின் பயன்பாட்டிற்கு அரசின் ஒப்புதல் பெற்று கொண்டுவர **நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.**

---

மாண்பு மேயர் அவர்களால் கொண்டுவரப்பெற்ற தீர்மானம் எண: 303

5. திருநெல்வேலி மாநகராட்சி தென்புறத்தில் மாநகராட்சி அலுவலகத்தினை விரிவாக்கப்படுத்துவதற்காக மாநகராட்சி அலுவலகத்தின் தென்புறம் 5 ஏக்கர் நிலத்தினை தனியாரிடமிருந்து கையகப்படுத்தும் வகைக்கு அரசின் ஒப்புதல் பெற்று உரிய **நடவடிக்கை மேற்கொள்ள அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.**

---

1. திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் 39-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.பா.சீதா அவர்கள் தனது 39வது வார்டுக்குட்பட்ட வேலவர் காலனியில் புதியதாக 2 எண்ணம் மின் கம்பம் அமைத்தும் மற்றும் ஏற்கனவே அமைந்துள்ள 3 மின்கம்பங்களில் தெருவிளக்கு வயர்கள் அமைத்து 5 எண்ணம் 60 வாட்ஸ் எல்.டி.இ விளக்குகள் அமைத்திடவும் மற்றும் கல்யாணி நகர் பகுதியில் புதியதாக 1 எண்ணம் மின்கம்பம் அமைத்தும் மற்றும் ஏற்கனவே உள்ள 1 மின்கம்பத்தில் தெரு விளக்கு வயர்கள் அமைத்து ஆக 2 எண்ணம் 60வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் அமைக்கவும் மற்றும் ஆசீர்வாதம் நகர் பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 1 மின் கம்பத்தில் 90வாட்ஸ் எல்.இ.டி விளக்கு அமைக்கவும் மற்றும்

வசந்தம் காலனி பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 2 மின்கம்பங்களில் தெரு விளக்கு வயர்கள் அமைத்து 2 எண்ணம் 60 வாட்ஸ் எல்.இ.டி பொருத்திடவும் மற்றும் டி.வி.எஸ் நகர் பகுதியில் புதியதாக 2 எண்ணம் மின்கம்பங்கள் அமைத்தும் மற்றும் ஏற்கனவே அமைந்துள்ள 3 மின்கம்பங்களில் தெரு விளக்கு வயர்கள் அமைத்து 5 எண்ணம் 60வாட்ஸ் எல்.இ.டி விளக்குகள் அமைக்கவும் ஆக மொத்தம் மேற்படி பகுதிகளில் புதிய மின்கம்பங்கள் 5 எண்ணமும், ஏற்கனவே அமைந்துள்ள 10 எண்ணம் மின் கம்பங்களில் 15 எண்ணம் தெரு விளக்குகள் அமைத்து கொடுக்கும்படி கேட்டு மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். மேற்படி மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி தமிழ்நாடு மின்சார மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய உத்தேச செலவினம் ரூ.4,50,000/- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவாகும் மேற்படி செலவினத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

**அலுவலக குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் 39-வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் பகுதிகளில் புதிய மின்கம்பங்கள் 5 எண்ணமும், ஏற்கனவே அமைந்துள்ள 10 எண்ணம் மின் கம்பங்களில் 15 எண்ணம் தெரு விளக்குகள் அமைத்து கொடுக்கும்படி கேட்டு மாமன்ற உறுப்பினர் கோரியுள்ளார். மேற்படி மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி தமிழ்நாடு மின்சார மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய உத்தேச செலவினம் ரூ.4,50,000/- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவாகும். மேற்படி செலவினத்திற்கு மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்: இ1/4419/2024 (பா.வார்டு)**

**தீர்மானம் எண்:304 அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**2..**திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட ,வார்டு எண்:43க்கு உட்பட்ட திருவனந்தபுரம் சாலை மத்திய சிறைச்சாலை அருகிலும், தெற்கு புறவழிச்சாலை சினேகா மருத்துவமனை அருகிலும் 600mm Dia PSC பாதாளசாக்கடை பிரதான குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி உடைந்த குழாயிலிருந்து வெளிவரும் சாக்கடை நீரினால் போக்குவரத்து இடையூறு மற்றும் தொற்று நோய் பரவும் அபாயம் காரணமாக போர்க்கால அடிப்படையில் மேற்படி அடைப்பினை சரி செய்யும் பொருட்டு ரூ.6.20இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளவும் மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் ஆணையாளர் அவர்கள் 21-06-2024 அன்று நிர்வாக அனுமதி வழங்கியமைக்கும், உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைவான விலைப்புள்ளீ அளித்த திரு.ஜாண்ஜெலஸ்டின் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்று மேற்படி பணியின் அவசரஅவசியம் கருதி உரிய வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்றமைக்கும் மாமன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலககுறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி மேலப பாளையம் மண்டலத்திற்குட்பட்ட, வார்டு எண்:43க்கு உட்பட்ட திருவனந்தபுரம் சாலை மத்திய சிறைச்சாலை அருகிலும், தெற்கு புறவழிச்சாலை சினேகா மருத்துவமனை அருகிலும் 600mm Dia PSCபாதாளசாக்கடை பிரதானகுழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி உடைந்த குழாயிலிருந்து வெளிவரும் சாக்கடைநீரினால் போக்குவரத்து இடையூறு மற்றும் தொற்று நோய் பரவும் அபாயம் காரணமாகபோர்க்காலஅடிப்படையில் மேற்படி அடைப்பினைசரி செய்யும் பொருட்டு ரூ.6.20இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளவும் மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022பிரிவு57(7)ன் கீழ் ஆணையாளர் அவர்கள் 21-06-2024 அன்று நிர்வாக அனுமதி வழங்கியமைக்கும், உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைவானவிலைப்புள்ளி அளித்த திரு.ஜாண்ஜெலஸ்டின் அவர்களின் ஒப்பந்நபுள்ளியை ஏற்று மேற்படிபணியின் அவசர அவசியம் கருதி உரிய வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்றமைக்கும் மாமன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.

**மதிப்பீடு எண்: 10/2024-2025**

**தீர்மானம் எண்:305 பார்வையிட்டு பதிவுசெய்யப்பட்டது.**

---

**3.** திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 52ல் உள்ள அன்னை கதீஜா கார்டன் குடியிருப்போர் நலச்சங்கத்தினர் மனுவில், சர்வே எண் 468/1ஏ பகுதி வார்டு AT Block 14 நகர்அளவு 4/2ஏ- ல் உள்ள உள்ளூர் திட்ட குழும அனுமதி பெற்று அன்னை கதீஜா கார்டன் உருவாக்கம் உரிய அனுமதி பெற்று குடியிருப்பு கட்டிய வீட்டிற்கு zone A – ன் அடிப்படையில் அதிகமாக சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டது எனவும்zone C – க்கு மாற்றம் செய்து குறைக்க தெரிவித்து' தமது 12.12.2023ம் தேதி அன்று தலைவர் மேல்முறையீடு தீர்ப்பாயத்திற்கு மனு செய்துள்ளார்.

இது தொடர்பாக **Zone A** – லிருந்து **Zone** B – ஆக குறைப்பது தொடர்பாக தலைவர் மேல்முறையீடு தீர்ப்பாயத்திற்கு பொருள் சீட்டு வைக்கப்பட்டது. திருநெல்வேலி மாநகராட்சி வரி விதிப்பு மேல்முறையீட்டு குழு தீர்மானம் எண் 03, நாள் 28.06.2024 ல் அன்னை கதீஜா கார்டன் பகுதியில் உள்ள குடியிருப்புகளை **Zone A** – லிருந்து Z**one B** என்ற அடிப்படையில் வரிவிதிப்பு மேற்கொள்ள வரி விதிப்பு மேல்முறையீட்டு குழு தீர்மானித்துள்ளது இதன் அடிப்படையில் அன்னை கதீஜா கார்டன் பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு Z**one B** என்ற அடிப்படையில் , இதுவரை மேற்கொள்ளப்பட்ட வரிவிதிப்புகளை Z**one B** என்ற அடிப்படையில்

மாற்றம் செய்யவும், இனிவரும் காலங்களில் வரிவிதிப்பு செய்யப்படும் கட்டிடங்களையும் **Zone B** என்ற அடிப்படையில் வரிவிதிப்பு செய்யவும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு :**

திருநெல்வேலி மாநகராட்சி வரி விதிப்பு மேல்முறையீட்டு குழு தீர்மானம் எண் 03, நாள் 28.06.2024 ல் அன்னை கதீஜா கார்டன் பகுதியில் உள்ள கட்டிடங்களை **Zone A** —— லிருந்து **ZoneB** என்ற அடிப்படையில் பொருளில் கண்டுள்ளவாறு வரிவிதிப்பு மேற்கொள்ள வரி விதிப்பு மேல்முறையீட்டு குழு முடிவெடுத்துள்ளதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்: அ/4440/2024**

**தீர்மானம் எண்:306 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**4.** திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண்:11 தச்சநல்லூர் மண்டலம், இளங்கோ நகர் திருக்கோவையர் தெரு சுடலை கோவில் உள்ளபாதாள சாக்கடை மெயின் குழாய் 200mm RCC குழாய் உடைப்பு ஏற்பட்டு பேராட்சி அம்மன் கோவில் அருகில் தாமிரபரணி ஆற்றில் கழிவு நீர் கலப்பதால் பொதுமக்கள் மற்றும் தாமிரபரணி ஆறு பாதுகாப்பு இயக்கத்தின் போராட்டம் நடத்த தெரிவித்துள்ளதால் குழாய் உடைப்பினை சரி செய்ய ரூ 4.10 இலட்சம் மதிப்பீட்டில் பணியின் அவசர அவகியம் கருதி மாநகராட்சி உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் ஆணையாளர் அவர்கள் 09.03.2024 அன்று நிர்வாக அனுமதி வழங்கியமைக்கும் குறைவான விலைப்புள்ளி அளித்த திரு. ஜான்ஜெலஸ்டீன் அவர்கள் ஓப்பந்த புள்ளியை ஏற்று 0.75% மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதத்தில் உரிய வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்றமைக்கு மாமன்றத்தின்பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண்:11 தச்சநல்லூர் மண்டலம், இளங்கோ நகர் திருக்கோவையர் தெரு சுடலை கோவில் உள்ளபாதாள சாக்கடை மெயின் குழாய் 200mm RCC குழாய் உடைப்பு ஏற்பட்டு பேராட்சி அம்மன் கோவில் அருகில் தாமிரபரணி ஆற்றில் கழிவு நீர் கலப்பதால் பொதுமக்கள் மற்றும் தாமிரபரணி ஆறு பாதுகாப்பு இயக்கத்தின் போராட்டம் நடத்த தெரிவித்துள்ளதால் குழாய் உடைப்பினை சரி செய்ய ரூ 4.10 இலட்சம் மதிப்பீட்டில் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் ஆணையாளர் அவர்கள் 09.03.2024 அன்று நிர்வாக அனுமதி வழங்கியமைக்கும் குறைவான விலைப்புள்ளி அளித்த திரு. ஜான்ஜெலஸ்டீன் அவர்கள் ஓப்பந்த புள்ளியை ஏற்று 0.75% மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதத்தில் உரிய வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிவுற்றமைக்கு மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**மதிப்பீடு எண்.176/2023-24**

**தீர்மானம் எண்:307 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

---

5. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண்கள் 15,16,17,18,19 மற்றும் 20 பகுதிகளில் 17-12-2023 அன்று ஏற்பட்ட வடகிழக்கு பருவமழை பேரிடர் காரணமாக அதிக அளவில் வெள்ள நீர் தேங்கி பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியேற முடியாமல் சிரமப்பட்டிருந்த சூழ்நிலையில் மேற்படி வார்டுகளில் பல பகுதிகளில் JCB இயந்திரங்கள் கொண்டு மண்மேடு அகற்றுதல், வாய்க்கால்களில் அமலைச் செடிகளை அகற்றி நீரை வடிய வைத்தல் மற்றும் குடியிருப்புகளில் தேங்கியுள்ள நீரை வெளியேற்றுதல் போன்ற பணிகளை அவசர அவசியம் கருதி போர்கால அடிப்படையில் சட்டப்பிரிவு 57 (7) கீழ் M/s. R.K. Enterprises நிறுவனம் 3 JCB இயந்திரங்கள் கொண்டு 15 தினங்களுக்கு மேற்கொள்ள ஒரு நாளைக்கு 8 மணி நேரத்திற்கு ஒரு JCB -க்கு ரூ.**7400/-** வீதம் மூன்று JCB-க்களுக்கு ரூ. **22,200**/- ஆகும். 15 நாட்களுக்கு மூன்று JCB-கள் பயன்படுத்திய வகைக்கு உத்தேச மதிப்பீட்டு செலவினம் ரூ.**3,33,000**/- ஆகும். மேற்படி நிறுவனத்தின் பட்டியல் தொகையான ரூ.**3,33,000/-**ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண்கள் 15,16,17,18,19 மற்றும் 20 பகுதிகளில் 17-12-2023 அன்று ஏற்பட்ட வடகிழக்கு பருவமழை பேரிடர் காரணமாக அதிக அளவில் வெள்ள நீர் தேங்கி பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியேற முடியாமல் சிரமப்பட்டிருந்த சூழ்நிலையில் மேற்படி வார்டுகளில் பல பகுதிகளில் **M/s. R.K. Enterprises** மூலம் **JCB 3** இயந்திரங்கள் கொண்டு மண்மேடு அகற்றுதல், வாய்க்கால்களில் அமலைச் செடிகளை அகற்றி நீரை வடிய வைத்தல் மற்றும் குடியிருப்புகளில் தேங்கியுள்ள நீரை வெளியேற்றுதல் போன்ற பணிகளை செய்தமைக்காக மேற்படி நிறுவனத்தின் உத்தேச செலவினத் தொகை ரூ.**3,33,000**/–ஐ வழங்குவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ1/ 000096 /2023) மதீப்பீடு எண்:181/2-23

தீர்மானம் எண்: 308 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது,

---

6. திருநெல்வேலி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைபணியின் வீடு வீடாக மற்றும் வணிக நிறுவனங்களில் குப்பை சேகரித்தல் என்னும் முதல் நிலை சேகரிப்பு (Primary Collection) மற்றும் 96Km நீளத்திற்கு சாலைகளை புழுதியற்ற சாலைகளாக பராமரித்தல், பேருந்து நிலையங்கள் (பாரதரத்னா MGR , தந்தை பெரியார் மற்றும் பாளை

பேருந்து நிலையங்கள்) சுத்தம் செய்தல் ஆகியபணிகள் நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை அரசாணை 116, நாள்: 24.08.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல் முறை ஆணைகளின் R.O.C. No. 35883 /2022/ EA1 - SWM-13 படி,ராம் &கோ என்னும் நிறுவனத்தால் ஒப்பந்தபணியாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மாமன்ற அனுமதி மூலம் ஒப்பந்த பணிகள் தவிர்த்த இதர பணிகளான கழிவுநீரோடை தூர்வாருதல், பூங்காக்கள் சுத்தம் செய்தல், பொதுகழிப்பிடங்கள் சுத்தம் செய்தல் உள்ளிட்ட பணிகளை செய்து வந்த சுய உதவிக்குழுக்களுக்கு பணிநீட்டிப்பு வழங்கப்பட்டு வந்த நிலையில், மேற்படி அரசாணை மற்றும் தனியார் மயமாக்கல் ஆகியவற்றால் மாமன்றம் மேற்படி சுய உதவிக்குழுக்களுக்கு பணிநீட்டிப்பு வழங்காமல் தேவைப்படும் பணியாளர்களை தேவைக்கேற்ப வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் பெற்றுக்கொள்ளதீர்மானித்தது.

மேற்படி தீர்மானவிபரத்தை தெரிவித்து, தங்களை காப்பீடு வசதிகள் மற்றும் உரிய சட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய நிறுவனமாக பதிவுசெய்துவெளிக்கொணர்வு(Out Sourcing) முறையில்,மாநகராட்சியின் ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டபணிகள் தவிர்த்த இதரபணிகளுக்கு,பணிகள் வழங்க இயலும் என்று சுய உதவிக்குழுக்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

சுய உதவிக்குழுக்கள் ̇ மேற்படி அறிவிப்பை ஏற்க மறுத்து தங்களுக்கு பணி நிரந்தரம் வேண்டும் என்றும், தாங்கள் தொடர்ந்து சுய உதவிக்குழுவாக இயங்குவோம் என்றும் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட கூடாதென்றும்,தெரிவித்து மாநகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு இரண்டு நாட்களாக இரவு பகலாக காத்திருப்பு போராட்டம் நடத்தினர். இந்நிலையில் அவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் தங்களுக்கு வாழ்வாதாரம் பாதிக்காமல் தொடர்ந்து பணி வழங்கவேண்டு மென்றும், தங்களுக்கு வேறு வருமானம் ஏதும் இல்லை என்றும் கோரிக்கை விடுத்தனர்.

எதிர்வரும் மழைக்காலம் மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள், கழிவு நீரோடைகள் தூர்வாரும் பணிகள் ஆகிய பொது சுகாதார நலன் சார்ந்த பணிகள் கருதியும், சுய உதவிக்குழு பணியாளர்களின் வருமானமற்ற ஏழ்மை நிலையினை கருத்திற் கொண்டும், நான்கு மண்டல சுகாதார ஆய்வாளர்கள், சுகாதார அலுவலர்கள் மற்றும் உதவி ஆணையாளர்கள் பணியாளர் தேவை அறிக்கையினை கருத்திற்கொண்டும் வெளிக்கொணர்வு (Out Sourcing) ஒப்பந்தபுள்ளி நடைமுறைகளுக்கு ஏற்படும் காலஅளவினை கருத்திற்கொண்டும் ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை பணியினை மேற்கொண்டு வரும் ராம் &கோ நிறுவனமான தங்கள் நிறுவனத்தின் மூலம் மேற்படி 524

பணியாளர்களை ஒப்பந்தஅடிப்படையில் பணியாளர்களுக்குரிய பாதுகாப்பு அம்சங்களுடன் Man Power Supply ஆக மாற்றுஏற்பாடுசெய்யப்படும் வரையில் கீழ்க்கண்டபணிகள்

1. கழிவுநீரோடை தூர்வாருதல்
2. பூங்காக்கள் சுத்தம் செய்தல்
3. சமுதாயமற்றும் பொதுக் கழிப்பிடங்கள் (PT, CT) சுத்தம் செய்தல்
4. ஆக்ரமிப்புக்கள் அகற்றல்
5. காய்,கனிசந்தைசுத்தம் செய்தல்
6. நுண் உரமையங்கள் செயலாக்கபணிகள்
7. கோவில் திருவிழாபகுதிகளில் சுத்தம் செய்தல்
8. அரசுமற்றும் மாநகராட்சிகட்டிடங்களில் ஒட்டப்பட்டசுவரொட்டிகளைஅகற்றுதல்
9. மாநகராட்சிஅலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைவளாகங்கள் சுத்தம் செய்தல்
10. பிளாஸ்டிக் ரெய்டு,டெங்கு தடுப்பு பணி மற்றும் மாநகராட்சி அவசியம் என கருதும் இதரபணிகள்

ஆகிய பணிகளை தினசரி மேற்கொள்ள, ஒப்பந்தபுள்ளி நடைமுறை முடியும் வரையில், மேற்படி நபர்களை 01.09.2024 முதல் ஈடுபடுத்திடவும், அதற்கான செலவினத் தொகையை (மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலி மற்றும் 5%சேவைகட்டணம்) மாநகராட்சியில் பெற்றுக்கொள்ளவும் ராம் &கோ நிறுவனத்தை பணிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும்

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் குறிப்பிட்டுள்ள இனங்களுக்குமாண்புமிகுமேயர்அவர்களால் 16.10.2024-ல் முன் அனுமதி வழங்கப்பட்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**எச்2/5456/2023**

**தீர்மானம் எண்:309 பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

**7.** திருநெல்வேலி மாநகராட்சி, பொது சுகாதாரம் நான்கு மண்டலங்களில் உள்ள **55** வார்டுகளிலும், சுயஉதவிக்குழு துாய்மைப்பணியாளர்கள் **524** நபர்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். மேற்படி நான்கு மண்டல சுயஉதவிக்குழு துாய்மைப்பணியாளர்களின் பணிக்கால அனுமதி மாமன்ற அவசரக்கூட்ட தீர்மான எண்: 137- நாள்: 15.07.2024-ல் ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான செலவினத்திற்கும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி சுயஉதவிக்குழு துாய்மைப்பணியாளர்களின் பணிக்காலம் **23.08.2024** -உடன் முடிவடைந்து விட்டது.

| வ.எண் | மண்டலத்தின் பெயர் | சுய உதவி குழுக்களின் எண்ணிக்கை | சுய உதவி குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பாபாளையங்கோட்டை | 9 | 89 |
| 2 | திருநெல்வேலி | 6 | 128 |
| 3 | மேலப்பாளையம் | 13 | 194 |
| 4 | தச்சநல்லூர் | 10 | 113 |
| | மொத்தம் | 38 | 524 |

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி, **2023-2024**-ம் ஆண்டிற்கு நான்கு மண்டல சுயஉதவிக்குழு துாய்மைப் பணியாளர்களுக்கு நான் ஒன்றுக்கு ரூ.480/-வீதம் தினக்கூலி வழங்கப்பட்டு வருகின்றது.

தற்சமயம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: **M3/ 1360/ 2024, நாள்: 20.06.2024**- ன்படி துாய்மைப் பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 480/- என்பதை உயர்த்தி ரூ.520/- ஆக நிர்ணயம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நாள் ஒன்றுக்கு ரூ.**520**/-வீதம் உயர்த்தப்பட்ட நிலுவைத் தொகையினை **01.04.2024** முதல் 23.08.2024 தேதி வரை வழங்கவும், மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் குறிப்பிட்ட, ஏற்கனவே உள்ள சுய உதவிக்குழு துாய்மைப் பணியாளர்கள் மொத்தம் 524- நபர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: **M3/1360/2024, நாள்: 20.06.2024**-ன்படி **01.04.2024** முதல் **23.08.2024** வரை ரூ.**520**/- என உயர்த்தப்பட்ட தினக்கூலியின் நிலுவை தொகையினை வழங்க மாண்புமிகு மேயர் அவர்களால் முன் அனுமதி 16.10.2024-ல் வழங்கப்பட்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**எச்2/7560/2017**

**தீர்மானம் எண்310 பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

8. திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 51 வைகறை தென்றல் நகர் பகுதியில் ரோஸ்மேரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு செல்லும் சாலையில் பெரிய குளத்திற்கு செல்லும் சிறுபாலத்தினை அகலப்படுத்துதல் மற்றும் புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.9.05 இலட்சத்திற்கு, வார்டு குழு தீர்மான எண்: 138, நாள்: 24.08.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 50/2023-24ன் படி மின்னணு முறையிலான முறையில் ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு 12.02.2024-ல்ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி **Tmt.P. Vijaya** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 14.02.2024 ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ.எண் | பணியின் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | **Tmt.P. Vijaya** ஒ ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| 1. | <u>பொது நிதி-2023-2024</u> மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண்:51 வைகறை தென்றல் நகர் பகுதியில் ரோஸ்மேரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு செல்லும் சாலையில் பெரிய குளத்திற்கு செல்லும் சிறுபாலத்தினை அகலப்படுத்துதல் மற்றும் புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணி. | **8,93,977/-** | **8,93,791/-** |
| | | | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |

எனவே,19.02.2024ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் **Tmt.P. Vijaya** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.**8,93,791/-** ஆனது மதிப்பீட்டை விட 0.51% குறைவானதாக உள்ளதால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரையின் பேரில் ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலிமாநகராட்சி,மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 51 வைகறை தென்றல் நகர் பகுதியில் ரோஸ்மேரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு செல்லும் சாலையில் பெரிய குளத்திற்கு செல்லும் சிறுபாலத்தினை அகலப்படுத்துதல் மற்றும் புதியதாக சிறுபாலம் அமைக்கும்பணிக்கு 19.02.2024.ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில்**Tmt.P. Vijaya** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.**8,93,791/-**ஆனது மதிப்பீட்டை விட 0.51%குறைவானதாக உள்ளதால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரையின் பேரில் ஒப்புக் கொள்வது குறித்து மாண்புமிகு மேயர் அவர்களால் முன் அனுமதி வழங்கப்பட்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**ம எண்: 112/2022-23 (MPM)**

**தீர்மானம் எண்: 311 பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

**9**. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 40க்குட்பட்ட காமராஜ் சாலை தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.38.60 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்:502 04.10.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 42/2023-24ன் படி மின்னனு முறையிலான முறையில் ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு மாநில

ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 23.11.2023ல் பிரசுரம் செய்துள்ளதின்படி 14.12.2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி**M/S Marshal Vignesh &Co** என்ற ஒரு நிறுவனத்தாரரிடமிருந்து மட்டும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்று இம் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வுசெய்ததில் **M/S Marshal Vignesh &Co** நிறுவனமானது தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் 05.02.2024 ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| ப.எண் | பணியின் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | **M/s Marshal Vignesh &Co** நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு.ரூ |
|---|---|---|---|
| 1. | **பொது நிதி-2023-2024**<br>மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 40 க்குட்பட்ட காமராஜ் சாலை தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி பணி | **38,16,202 /-** | **38,15,818 /-** |
| | | | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |

எனவே, 06.02.2024.ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் **M/s Marshal Vignesh &Co** நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.**38,15,818 /-**ஆனது மதிப்பீட்டை விட 0.01%குறைவானதாக உள்ளதால் ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரையின் பேரில் ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 40 க்குட்பட்ட காமராஜ் சாலை தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு 06.02.2024 .ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில்**M/s Marshal Vignesh &Co** நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.**38,15,818 /-**ஆனது மதிப்பீட்டை விட 0.01% குறைவானதாக உள்ளதால் நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரையின் பேரில் ஒப்புக் கொள்வது குறித்து மாண்புமிகு மேயர் அவர்களால் முன் அனுமதி வழங்கப்பட்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**Est No.71/23-24**

**தீர்மானம் எண்: 312 பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

# திருநெல்வேலி மாநகராட்சி

## 28.10.2024 அன்று நடைபெற்ற் அவசரக் கூட்டப்பொருட்கள் விபரம் மற்றும் தீர்மானங்கள் விபரம்

---

**1.** திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டலம் பேட்டை மற்றும் பழைய பேட்டை பகுதியில் சேகரமாகும் குப்பைகள் இராமையன்பட்டி உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லும் மாநகராட்சி வாகனம் அவ்வப்போது பழுதாகி நின்று விடுவதால் பொது சுகாதார பணியின் அவசியம் கருதி ஆணையாளர் அவர்களின் நேரடி உத்திரவிற்கிணங்க வாடகை டிராக்டர் திரு. மகாராஜன் என்பவருக்கு சொந்தமான TN72 BB 7826 டிராக்டர் வாகனம் மூலம் 2017-ம் ஆண்டு முதல் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று திருநெல்வேலி மண்டலப் பகுதியில் சேகரமாகும் குப்பைகள் அகற்றப்பட்டு இராமையன்பட்டி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டது. மேலும் அதற்கான தொகை அவ்வப்போது வழங்கப்பட்டு வந்துள்ளது.

மேலும் மேற்படி பணிக்கு இறுதியாக 01.05.2019 முதல் 03.12.2019 வரை உள்ள காலத்திற்கு உரிய நிர்வாக அனுமதி பெற்று அதற்கான பட்டியல் தொகை திரு. மகாராஜன் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் 04.12.2019 முதல் 08.04.2020 வரையிலான காலத்திற்கு திரு. மகாராஜன் என்பவர் உரிய நிர்வாக அனுமதி மற்றும் வேலை ஆணை வழங்காமல் அவசர அவசியம் கருதி பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும் சம்பந்தப்பட்ட சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர்கள் அறிக்கையில் 04.12.2019 முதல் 08.04.2020 வரையுள்ள காலத்திற்கு மேற்படி வாகனம் மூலம் குப்பைகள் அகற்றப்பட்டு இராமையன்பட்டி உரக்கிடங்கிற்கு கொண்டு சென்றமைக்கு திரு. மகாராஜன் என்பவருக்கு தொகை வழங்க வேண்டி பரிந்துரை செய்துள்ளார்கள்.

சம்பந்தப்பட்ட சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர்கள் தங்களது அறிக்கையில் மேற்படி பணிக்கு உபயோகபடுத்தப்பட்ட டிராக்டர் வாகனம் எண் TN72 BB 7826 வாகனம் மூலம் 04.12.2019 முதல் 08.04.2020 முடிய உள்ள காலத்திற்கு மொத்தம் 1173.20 மணி நேரம் மேற்படி வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் சான்றளித்துள்ளார்கள். மேலும் ஒரு மணி நேரத்திற்கு ரூ. 380/- வீதம் 1173 மணி நேரத்திற்கு மொத்தம் ரூ.4,45,740/-ற்கான பட்டியல் தொகையினை திரு. மகாராஜன் என்பவருக்கு வழங்க வேண்டியுள்ளதால் ஆணையாளர் அவர்களின் பின்னேற்பு பெற்று வழங்க அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

மேலும் திரு. மகாராஜன் என்பவர் 04.12.2019 முதல் 08.04.2020 முடிய மேற்படி பணிக்கு டிராக்டர் பயன்படுத்தியதற்கான வாடகை வழங்கவில்லை எனவும் தனக்கு மேற்படி தொகையினை வழங்க கோரி ஆணையாளர் அவர்களிடம் மனு சமர்ப்பித்துள்ளார்.

தற்போது டிராக்டர் வாடகை தொகை ரூ.4,45,740/- வழங்க வேண்டி அன்னார் உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் 1வது பிரதிவாதியாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர், 2வது பிரதிவாதியாக ஆணையாளர் திருநெல்வேலி மாநகராட்சி, 3வது பிரதிவாதியாக துணை ஆணையாளர் திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் 4வது பிரதிவாதியாக சுகாதார ஆய்வாளர், திருநெல்வேலி மண்டலம் திருநெல்வேலி மாநகராட்சி அவர்களை சேர்த்துள்ளார்.

எனவே மேற்படி பணிக்கு சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர்களின் அறிக்கையின் படி, 04.12.2019 முதல் 08.04.2020 வரையுள்ள காலத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.380/- வீதம் டிராக்டர் பயன்படுத்தமைக்கு நிர்வாக பின்னேற்பு அனுமதி வேண்டியும் அதற்கான வாடகைத் தொகை ரூ.4,45,740/- யை மேற்படி பணி செய்த உரிமையாளர் திரு. மகாராஜன் என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்காக

## அலுவலக குறிப்பு :

மேற்படி பணிக்கு சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர்கள் அறிக்கையின் படி, 04.12.2019 முதல் 08.04.2020 வரையுள்ள காலத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.380/- வீதம் டிராக்டர் பயன்படுத்தமைக்கு நிர்வாக பின்னேற்பு அனுமதியும் அதற்கான வாடகைத் தொகை ரூ.4,45,740 யை மேற்படி பணி செய்த உரிமையாளர் திரு. மகாராஜன் என்பவருக்கு வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**கோப்பு எண் இ1/1852/2021 (திலி வார்டு)**

**<u>தீர்மானம் எண்:313 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</u>**

---

**2.** தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 01.07.2024 முதல் 53சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணை எண்: 317 நிதித் (படிகள்) துறை நாள்: 18.10.2024 மற்றும் அரசாணை எண்: 319 நிதித் (ஓய்வூதியம்) துறை நாள்: 18.10.2024 ஆகியவை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட அரசாணைகளை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்:C3/ 7374 /2024(மைய அலுவலகம)**

**தீர்மானம் எண்:314 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

---

3. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 18 சேரன்மகாதேவி ரோடு தெற்கு விரிவாக்கம் (சாஸ்திரி நகர் அருகில்) உள்ள ஸ்ரீ . அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் மின் இணைப்பு வழங்க ஊர்பொதுமக்கள் கேட்டுள்ளார். மனுதாரர் கோரப்பட்ட மனுவில் உள்ள இடத்தில் கோவில் மட்டுமே இருப்பதால் வரிவிதிப்பு செய்ய இயலாத நிலையில் மேற்படி கோவிலுக்கு மின்சாரம் இணைப்பு வழங்கும் பொருட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 87 (a) ல் காணும்

வழிகாட்டுதல்களின்படி மேற்படி ஸ்ரீ அருள்மிகு மாரியம்மன் கோவிலுக்கு சொத்துவரிவிதிப்பில் இருந்து விலக்கு அளிப்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்றும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 87 (a) ல் காணும் வழிகாட்டுதல்களின்படியும் பொதுமக்களின் நலன் கருதி வார்டு எண் 18 சேரன்மகாதேவி ரோடு தெற்கு விரிவாக்கமம் (சாஸ்திரி நகர் அருகில்) உள்ள ஸ்ரீ அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் மின் இணைப்பு வழங்கும் பொருட்டு மேற்படி கோவிலுக்கு சொத்துவரிவிதிப்பில் இருந்து விலக்கு அளிக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(அ3/1823/2024)(திருநெல்வேலி வார்டு)**

**தீர்மானம் எண்: 315 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

4. அரசாணை எண் G.O.(Ms) No.113, Municipal Administration and Water Supply (MA.IV) Department, dated 05.09.2024-ல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி எண் 264-ன் துணை விதி (2)-க்கு பதிலாக கீழ்க்கண்டவாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது .

AMENDMENT

‘”(2) Unless otherwise ordered by the Government, in Public Interest, the annual value of land, buildings, storage structures or telecommunication towers shall be revised every year by six percent, except for the years in which general revision is carried out”.

இத்திருத்தம் தமிழ்நாடு அரசிதழில் 05.09.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு அரசிதழ் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

**அலுவலகக் குறிப்பு:**

மாண்புமிகு மேயர் அவர்களால் முன்அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி அரசாணை மற்றும் தமிழ்நாடு அரசிதழ் மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(அ1/6502/2024-மை.அ.)**

**தீர்மானம் எண்:316 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

---

5. திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் சிப்பம்-8, வார்டுஎண் 33க்குட்பட்ட லங்கர்காணாதெரு மற்றும் வார்டுஎண் 34க்குட்பட்ட மனகாவலம் பிள்ளை மருத்துவமனை சாலைப்பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: 2459/2024/SS1,நாள்: 29.07.2024ல் ரூ.107.50 இலட்சத்திற்கு (ரூ.49.85இலட்சம் TURIP 2024-25 நிதியும் மீதமுள்ள ரூ.57.65இலட்சத்திற்கு மாநகராட்சி பொதுநிதியில் செய்வதற்கு) திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் படியும், தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: 18484/2023/DO1,நாள்: 16.09.2024ல்

ரூ.107.50 இலட்சத்திற்கு (ரூ.49.85இலட்சம் TURIP 2024-25 நிதியும் மீத முள்ள ரூ.57.65 இலட்சத்திற்கு மாநகராட்சி பொதுநிதியில் செய்வதற்கு) திருத்திய தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் ,மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புஎண்: 11/2024-25ன்படி மாநில அளவில் தினமலர் தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 03.10.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின் படி21.10.2024-ல் மின்னணு முறையிலான இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 1) M/s.Mercy Rajan Associates, Tirunelveli, 2) M/s.S.Vellapandi&Co,Kayathar, 3)Thiru.V.R. Nagarajan, Tirunelveli ஆகிய மூன்று ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 21.10.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு தொழில் நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மேற்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் 22.10.2024-ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன்விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | **M/s.Mercy Rajan Associates** ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளிமதிப்பு ரூ. | **M/s.SVellapandi& Co** ஒப்பந்தக்காரரின்ஒப்பந்தப்புள்ளிமதிப்பு ரூ. | **Thiru.V.R. Nagarajan** ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளிமதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | பாளையங்கோட்டை மண்டலம் சிப்பம்-8,வார்டு எண் 33க்குட்பட்ட லங்கர் காணா தெரு மற்றும் வார்டுஎண் 34க்குட்பட்ட மனகாவலம் பிள்ளை மருத்துவமனை சாலைப் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | **55,31,168/-** | **47,01,548/-** | **52,55,253/-** | **50,33,334/-** |
| | | | மதிப்பீட்டைவிட 14.999%குறைவு | மதிப்பீட்டைவிட 4.988%குறைவு | மதிப்பீட்டைவிட 9.001%குறைவு |

எனவே, 22.10.2024.ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் **M/s.Mercy Rajan Associates** என்ற ஒப்பந்ததாரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி மதிப்புரூ.**47,01,548/-**ஆனது மதிப்பீட்டை விட14.999% குறைவானதாக உள்ளதால் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுபரிந்துரையின் பேரில்ஒப்புக் கொள்வது குறித்துமாமன்றம் முடிவுசெய்யலாம் எனபரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டைமண்டலம் சிப்பம்-8,வார்டுஎண் 33க்குட்பட்ட லங்கர் காணா தெரு மற்றும் வார்டு எண் 34க்குட்பட்ட மனகாவலம் பிள்ளை மருத்துவமனை சாலைப் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணிக்கு 22.10.2024.ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் **M/s.Mercy Rajan Associates** என்ற ஒப்பந்ததாரிடமிருந்து

**ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.47,01,548/-ஆனது மதிப்பீட்டை விட 14.999% குறைவானதாக உள்ளதால் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரையின் பேரில் ஒப்புக் கொள்வதற்கு மாண்புமிகு மேயர் அவர்களால் முன் அனுமதிவழங்கப்பட்டமைக்குமாமன்றம் பின்னேற்புவழங்கலாம்.**

**ம.எண்:11/2024-25/P8.**

**தீர்மானம் எண்:317 பின்னேற்பு வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

**6.** திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 19, பேட்டை ரகுமான் பேட்டை, ஆசிரியர் காலனி, கருங்காடுரோடு தங்கம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மாமன்ற உறுப்பின் கோரிக்கையின் பேரில் ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு லைன் அமைத்து புதிய 40 வாட்ஸ் LED விளக்குகள் 3 எண்ணங்கள் அமைக்கவும், புதிய மின்கம்பம் 3 எண்ணம் தெருவிளக்கு லைன் உடன் அமைத்து புதிய 40 வாட்ஸ் LED விளக்குகள் 3 எண்ணம், மொத்தம் 6 எண்ணம் புதிய தெருவிளக்கு அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ. 1,50,000/- (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

**மேலே பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 19, பேட்டை ரகுமான் பேட்டை, ஆசிரியர் காலனி, கருங்காடுரோடு தங்கம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் 40 வாட்ஸ் LED விளக்குகள் 6 எண்ணம் அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ.1,50,000/-(ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.**

(இ1/2379 /2024).

**தீர்மானம் எண்:318 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**7.** திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 15, டவுண் கோட்டையடி தெரு பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் மனுவின்பேரில் இடம் பார்வையிடப்பட்டது. மேற்படி பகுதியில் புதிய மின்கம்பம் ஒரு எண்ணம் தெருவிளக்கு லைன் உடன் அமைத்து புதிய 40 வாட்ஸ் LED விளக்கு ஒரு எண்ணம் அமைக்க தெருவிளக்கின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ. 50,000/- (ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

மேலே பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 15, டவுண் கோட்டையடி தெரு பகுதியில் புதிய மின்கம்பம் தெருவிளக்கு லைன் உடன் அமைத்து புதிய 40 வாட்ஸ் LED விளக்கு ஒரு எண்ணம் அமைக்க தெருவிளக்கின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ. 50,000/- (ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(இ1/ 2296 /2024).**

**தீர்மானம் எண்:319 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**8.** திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 18, பேட்டை, அரசினா் தொழில் பயிற்சி நிலையம் (ITI) பின்புறம் உள்ள A M நகா் பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க ஆணையா் அவா்களின் மனுவின் பேரில் இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி பகுதிகளில் ஏற்கனவே உள்ள மின் கம்பகளில் தெருவிளக்கு லைன் அமைத்து புதிய 40 வாட்ஸ் LED விளக்குகள் 21 எண்ணம் அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ. 3,50,000/- (முன்று லட்சத்து ஐம்பதாயிரம்)-க்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

மேலே பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 18, பேட்டை, அரசினா் தொழில் பயிற்சி நிலையம் (ITI) பின்புறம் உள்ள A M நகா் பகுதியில் புதிய தெருவிளக்குகள் 40 வாட்ஸ் LED விளக்குகள் 21 எண்ணம் அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ. 3,50,000/- (முன்று லட்சத்து ஐம்பதாயிரம்)-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(இ1/ 2049 /2024).**

**தீா்மானம் எண்:320 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

9. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 17, பழைய பேட்டை, சா்தார்புரம் வடக்கு பகுதி, சா்ச் தெரு ஆகிய பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் அமைக்க வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் மனுவின்பேரில் இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி பகுதிகளில் ஏற்கனவே உள்ள 7 எண்ணம் மின் கம்பகளில் தெருவிளக்கு லைன் அமைத்து புதிய 40 வாட்ஸ் LED விளக்குள் 7 எண்ணம் அமைக்கவும், புதிய மின்கம்பம் 2 எண்ணம் தெருவிளக்கு லைன் உடன் அமைத்து 40 வாட்ஸ் LED விளக்குள் 2 எண்ணம் மொத்தம் 9 எண்ணம் புதிய தெருவிளக்குகள் அமைக்க விளக்குளின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ. 2,00,000/- (இரண்டு லட்சம்)-க்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

மேலே பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 17, பழைய பேட்டை, சா்தார்புரம் வடக்கு பகுதி, சா்ச் தெரு ஆகிய பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் 40 வாட்ஸ் LED விளக்குள் மொத்தம் 9 எண்ணம் அமைக்க தெருவிளக்குகளின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ. 2,00,000/- (இரண்டு லட்சம்)-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(இ1/ 2276 /2024).**

**தீா்மானம் எண்: 321 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**10.** திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 17, பழைய பேட்டை, சமூகரெங்கன் கட்டளை வடக்கு பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க வணக்கத்திற்குரிய மேயா் அவா்களின் மனுவின்பேரில் இடம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி பகுதிகளில் ஏற்கனவே உள்ள மின் கம்பகளில் தெருவிளக்கு லைன் அமைத்து புதிய 40 வாட்ஸ் LED விளக்குள் 2 எண்ணம் அமைக்கவும் தெருவிளக்குகளின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ. 50000/–க்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

மேலே பொருளில் குறிப்பிட்டுள்ளபடி, திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 17, பழைய பேட்டை, சமூகரெங்கன் கட்டளை வடக்கு பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க ஏற்கனவே உள்ள மின் கம்பகளில் தெருவிளக்கு லைன் அமைத்து புதிய 40 வாட்ஸ் LED விளக்குள் 2 எண்ணம் அமைக்கவும் தெருவிளக்குகளின் மதிப்பும், மின்வாரிய மதிப்பீட்டு கட்டணங்கள் உட்பட உத்தேச தொகை ரூ. 50000/—க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(இ1/ 2203 /2024).**

**தீர்மானம் எண்:322 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

11. திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட நேருஜி கலை அரங்கத்தினை பொறுத்தவரையில் குறுமத்தொகையாக ரூ.25.00 லட்சம் மற்றும் வைப்புத் தொகையாகரூ.5.00 லட்சம் நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 5 முறை ஏலம் விடப்பட்டுள்ளது. மேற்படி ஏலத்தில் இதுவரை யாரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் ஏலம் எடுக்க விரும்புபவர்கள் கீழ்க்கண்ட காரணங்களை குறிப்பிட்டு ஏலம் எடுக்க முன் வருவதில்லை.

கலையரங்கத்தினை மண்டபமாக பயன்படுத்தலாம் எனக் கருதி ஆண்டு ஒன்றுக்கு சுமார் 50 சுபமுகூர்த்ததினங்கள் என கணக்கில் கொண்டு, குறுமத் தொகை மற்றும் வைப்புத் தொகை (50 நிகழ்ச்சிகள் x Rs.50,000 = Rs.25,00,000/-) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஆனால் கலையரங்கத்தின் மேடை (Stage) கிழக்கிலிருந்து மேற்காக அமைக்கப்பட்டுள்ளது. இதனால் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடத்திட மேடையானது கிழக்கு நோக்கி அமைக்கப்படாததால், சுபநிகழ்ச்சிகள் நடத்திட எவரும் முன் வரவில்லை. எனவே திருமண மண்டபமாக பயன்படுத்த யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை.

மேலும் அதனை மண்டபமாக நடத்திட உரிய சமையல் கூடம் மற்றும் உணவு அருந்தும் அறை (Kitchen and Dining hall) ஆகியவை ஏற்படுத்தப்படவில்லை. எனவே திருமண நிழச்சிகள் நடத்திட இயலாது. தற்போது அரசு துறை சார்ந்த கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டு வருகிறது. எனவே பொது ஏலம் குத்தகைக்கு வழங்கப்பட்டாலும், திருமண நிகழ்ச்சி தவிர்த்து இதர நிகழ்ச்சிகள் மட்டுமே நடத்திவரும் சூழ்நிலை உள்ளதால் குறுமதொகை மிக அதிகம் எனகருதி எவரும் பொது ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டங்களிலும் கட்டிடம் குத்தகைக்கு வழங்காமல் இருப்பதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்புகள் அதிகமாக உள்ளதால் குறுமதொகையினை குறைவு செய்து பொது ஏலம் நடத்திடவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி அரங்கத்தினை(Auditorium) வணிக கட்டிடமாக இயக்க அருகில் உள்ள வணிக வளாகங்கள் சதுரடிஒன்றுக்குரூ.40/- முதல் ரூ.50/- வரை நிர்ணயம் செய்துள்ளார்கள். இதே சாலையில் அமைந்துள்ள சீர்மிகுநகரம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பேருந்து நிலைய கட்டிடத்திற்கு (முதல் தளம்) பொதுப்பணித் துறை மூலம் வாடகை சதுரடி ஒன்றுக்கு ரூ.23.50 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த கலையரங்கத்தினை பொறுத்தமட்டில் திருமண மண்டபம் எனத் தவறாக கருதி குறுமத்தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இதனை சதுரடி அடிப்படையில் சந்தை மதிப்பிற்கேற்ப முழுவதும் குளிரூட்டப்பட்ட அரங்கமாக உள்ளதால் (Fully Air Condition hall) சதுரடி ஒன்றுக்கு ரூ.40.00 எனக் கணக்கிட்டு, மொத்த சதுரடி 30386-க்கு குறுமத் தொகையாக (ரூ.40.00 x 30386 சதுரடி ) ரூ.12,15,440/- வருவதை ரூ.12.50 லட்சம் எனவும், முன்வைப்புத்தொகை ரூ.5.00லட்சம் என

இப்பொருள் தொடர்பாக அரசாணை எண்.(2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.6-8-2024ன்படி வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16-10-2024 தேதியில் நடைபெற்ற் கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும்,முடிவிற்கும்.

**அலுவலககுறிப்பு கோப்பு:**

மேற்கண்டவாறு பொருளில் குறிப்பிட்ட காரணங்களால் இந்த கலையரங்கத்தினை பொறுத்தமட்டில் திருமண மண்டபம் எனத் தவறாக கருதி குறுமத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இதனை சதுரடி அடிப்படையில் சந்தை மதிப்பிற்கேற்ப முழுவதும் குளிரூட்டப்பட்ட அரங்கமாக உள்ளதனை (Fully Air Condition hall)சதுரடி ஒன்றுக்கு ரூ.40.00 எனக் கணக்கிட்டு,மொத்த சதுரடி 30386-க்கு குறுமத் தொகையாக (ரூ.40.00 x 30386 சதுரடி) ரூ.12,15,440/- வருவதை ரூ.12.50 லட்சம் எனவும், முன்வைப்புத்தொகை ரூ.5.00 லட்சம் என நிர்ணயம் செய்திட இப்பொருள் தொடர்பாக அரசாணை எண்.(2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.6-8-2024ன்படி வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16-10-2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டுள்ள விபரம் மாமன்றம் முடிவுசெய்யலாம்.

அ1/4404/2022

**தீர்மானம் எண்: 323 வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழு கூட்டத்தின் முடிவின்படி வாடகை குறைவிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

12. திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.37ல் அமைந்துள்ள உள்விளையாட்டு அரங்கிற்கான(Tennis Court- 8 Court) குறுமத் தொகையாகரூ.10.00 லட்சம் மற்றும் வைப்புத் தொகையாகரூ.4.00 லட்சம் நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 3 முறை ஏலம் விடப்பட்டும்மீண்டும் 23-10-2024 அன்று ஏலம் நடைபெறவுள்ளது. நடைபெற்ற 3 ஏலத்திலும் யாரும் கலந்துகொள்ளவில்லை.

மாவட்டஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டங்களிலும் கட்டிடம் குத்தகைக்கு வழங்காமல் இருப்பதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்புகள் அதிகமாக உள்ளதால் குறுமதொகையினை குறைவு செய்து பொதுஏலம் நடத்திடவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக அமைக்கப்பட்டஅலுவலர்கள்,மாவட்டவிளையாட்டுஅலுவலர் மற்றும் தனியார் விளையாட்டரங்க உரிமையாளர் கொண்ட குழுவின் கூட்டத்தில், கலந்து கொண்டவர்களது கருத்துப்படி மாநகராட்சி விளையாட்டரங்கின் சராசரி உயரம் 25 அடி என்றும், அதன் உள் தளப்பகுதி சிமெண்ட் கான்கீரிட்-ல் அமைக்கப்பட்டுள்ளது கான்கிரிட்

தரையில் விளையாடுவதால் விளையாடும் நபர்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், போதுமான மின்விளக்கு வசதி அமைக்கப்படவில்லை எனவும், குத்தகைக்கு எடுக்கும் நபரால் மேற்கண்ட வசதிகள் செய்து கொடுக்க அதிக செலவினங்கள் ஏற்படவாய்ப்பு உள்ளது எனவும் அதனால் ஏலதொகையினை குறைவு செய்தால் ஏலத்தில் கலந்து கொள்ளவிரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது. பொதுவாக இது போன்ற உள்விளையாட்டரங்குகளில் மரத்திலான தளங்கள் அமைக்கப்படும் எனவும் தனியார் விளையாட்டரங்கின் உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படிஅலுவலர்கள் குழு கூட்டத்தில் சராசரியாக ஒரு அரங்கிற்கு காலை 2 மணிநேரம் மற்றும் மாலை 2 மணிநேரம் ஆக மொத்தம் 4 மணிநேரம் விளையாட்டு நடைபெறும். இதற்கான மாத கட்டணமாக நபர் ஒன்றுக்குரூ.500/- வீதம் வசூலிக்கலாம் என்றும், ஒரு மணி நேரத்திற்கு அரங்கம் ஒன்றுக்கு 4 நபர்கள் வீதம் 8 அரங்கிற்கு 32 நபர்கள் காலை மற்றும் மாலை சேர்த்து (மொத்தம் 4 மணிநேரம்) தினசரி 128 நபர்கள் விளையாடலாம் என்றும், அதற்கான மாத கட்டணம் நபர் ஒருவருக்குரூ.500/- வீதம் (500 x 128 = 64000) மாத வருவாய் ரூ.64,000/- என்றும் ஆண்டு வருவாய் ரூ.7,68,000/- எனக் கணக்கிடப்பட்டது.

கூட்டமுடிவில், ரூ.7,68,000 எனநிர்ணயம் செய்யப்பட்டாலும் முழுமையாக குறுமத் தொகை ரூ.10.00 லட்சம் என முடிவு செய்யப்பட்டது, வைப்புத் தொகைரூ.4.00 லட்சம் எனவும் குறிப்பிட்டு மாமன்ற அனுமதி பெற்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மூன்று முறை ஏலம் கோரியும் ஒருவரும் ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை.

இந்த விளையாட்டரங்கத்தினை விளையாட்டு ரசிகர்கள் மேற்கண்ட காரணங்களை குறிப்பிட்டு உட்கட்டமைப்பினை மாற்றியமைக்க செலவினங்கள் மற்றும் நிர்வாக செலவினை குறிப்பிட்டு குறுமத் தொகையினை குறைக்க கோரி வருகிறார்கள். மேலும், வரியில்லா இனங்கள் மீதான ஏற்கனவே அமைக்கப்பட்ட அலுவலர்கள் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளவாறு குறுமத்தொகையாகரூ.7.68லட்சம் எனவும், அதற்கான முன் வைப்புத்தொகையாக ரூ.4.00 லட்சம் எனவும் நிர்ணயம் செய்திட இப்பொருள் தொடர்பாக அரசாணை எண்.(2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 6-8-2024ன்படி வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16-10-2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

அலுவலககுறிப்புகோப்பு:

மேற்கண்டவாறு பொருளில் குறிப்பிட்ட காரணங்களால் இந்த விளையாட்டு அரங்கிற்கான குறுமத்தொகையாக ரூ.7.68லட்சம் எனவும், அதற்கான முன்

வைப்புத்தொகையாக ரூ.4.00 லட்சம் எனவும் நிர்ணயம் செய்திட இப்பொருள் தொடர்பாக அரசாணை எண்.(2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 6-8-2024ன்படி வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16-10-2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டுள்ள விபரம் மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ1/3087/2024**

**தீர்மானம் எண்: 324 வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல்குழு மற்றும் துணைக்குழு கூட்டத்தின் முடிவின் படி குறுமத்தொகை குறைவிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

**13.** திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டல அலுவலத்திற்கு உட்பட்ட வார்டு எண்.32, திருவனந்தரபுரம் சாலையில் அமைந்துள்ள சீர்மிகு நகரதிட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்டுள்ள வணிகமால் வளாகம் தரைதளம் மற்றும் முதல், இரண்டு மற்றும் மூன்று தளங்களை கொண்டுள்ளது. மாமன்றத்தீர்மானம் எண்.240 நாள்.28.2.2023 தரைதளம் சதுரடிரூ.120/- எனவும், முதல் தளம் சதுரடி ரூ.100/- எனவும், இரண்டு மற்றும் மூன்றாம் தளம் ரூ.80/- எனவும் தீர்மானிக்கப்பட்டு ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. பலமுறை ஏலம் விடப்பட்டும் யாரும் ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோராததால், மீண்டும் வாடகை இறுதியாக சதுரடி ஒன்றுக்கு கீழ்கண்ட விபரப்படி பலமுறை ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

| வ.எண் | விபரம் | பரப்பளவு | சதுரடிவாடகைநிர்ணயம் |
|---|---|---|---|
| 1 | தரைதளம் | 9667 சதுரடி | ரூ.100/- |
| 2 | முதல்தளம் | 9667 சதுரடி | ரூ.90/- |
| 3 | இரண்டாம் தளம் | 9667 சதுரடி | ரூ.80/- |
| 4 | மூன்றாம் தளம் | 9667 சதுரடி | ரூ.70/- |

மேற்கண்ட விபரப்படி பலமுறை ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரியும், உள்ளூர் பண்பலை வானொலி மூலம் பல மாதங்களாக விளம்பரப்படுத்தப்பட்டும், இது வரையாரும் ஏலம்/ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ளவில்லை.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டங்களிலும் கட்டிடம் குத்தகைக்கு வழங்காமல் இருப்பதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்புகள் அதிகமாக உள்ளதால் குறும தொகையினை குறைவு செய்து பொது ஏலம் நடத்திடவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் வணிகவளாகம் அமைந்துள்ள திருவனந்தபுரம் சாலையில் கட்டப்பட்டுள்ள அருகிலுள்ள தனியார் வணிகவளாக கட்டிடங்கள் சராசரியாக சதுரடி ஒன்றுக்கு ரூ.45/- முதல் ரூ.60/- என வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விபரம் தெரியவந்தது. மேற்படி வணிக வளாக மால் கட்டிடத்திற்கு அருகில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பாளை பேருந்து நிலைய கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கிவரும் மாநில அரசின் பத்திர பதிவுத்துறையின் மாவட்ட சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சதுரடி ஒன்றுக்கு ரூ.23.50 என பொதுப்பணித்துறையினரால் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு,வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மால் கட்டிடம் உள் கட்டமைப்பு வசதிகள் (interior works- electrical fittings, falls ceiling etc.,) செய்ய வேண்டியுள்ளதால் தனித்தனியாக வாடகைக்கு விடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எனவே வணிக வளாக கட்டிடத்தினை சதுரடி ஒன்றுக்கு கீழ்கண்டவிபரப்படி

சராசரியாக கணக்கிட்டு வாடகை நிர்ணயம் செய்யலாம்.

| வ.எண் | விபரம் | பரப்பளவு | சதுரடிவாடகைநிர்ணயம் |
|---|---|---|---|
| 1 | தரைதளம் | 9667 சதுரடி | ரூ.60/- |
| 2 | முதல்தளம் | 9667 சதுரடி | ரூ.50/- |
| 3 | இரண்டாம் தளம் | 9667 சதுரடி | ரூ.40/- |
| 4 | மூன்றாம் தளம் | 9667 சதுரடி | ரூ.40/- |

மேற்கண்வாறு நிர்ணயம் செய்ய இப்பொருள் தொடர்பாக அரசாணை எண்.(2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 6-8-2024ன்படி வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16-10-2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் மாத வாடகையாக ரூ.18.00/- லட்சம் மாநகராட்சிக்கு வருமானம் ஈட்டப்பட வாய்ப்புள்ளது. குறுமத்தொகையினை குறைக்க கோரியும் வருகிறார்கள். இதனடிப்படையிலும், வெவ்வேறு அளவுகளில் அமைந்துள்ள அறைகளுக்கு தனித்தனியாக குறுமத்தொகை மற்றும் முன் வைப்புத்தொகை கணக்கிட்டு (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) வாடகைக்கு வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட வணிக மால் கட்டிடத்தின் மூலம் மாநகராட்சிக்கு மாதாந்திர வாடகை வருமானம் ஈட்டிட இப்பொருள் தொடர்பாக அரசாணை எண்.(2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.6-8-2024ன்படி வரியில்லா இனங்கள் மீதான வழி காட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16-10-2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு தளத்தினையும் தனித்தனியாக ஏலம் கோரும் பட்சத்தில் குறுமத்தொகை மற்றும் முன் வைப்புத்தொகை கணக்கிட்டு வாடகைக்கு வழங்குவது சம்பந்தமாக மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அ1/968/2023**

**தீர்மானம் எண்: 325 வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல்குழு மற்றும் துணைக்குழு கூட்டத்தின் முடிவின்படி சதுரடி வாடகை குறைவிற்கும், குறுமத்தொகை மற்றும் முன்வைப்புத்தொகை கணக்கிட்டு வாடகை நிர்ணயம் செய்து வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

---

14 .திருநெல்வேலி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியின் வீடு வீடாக மற்றும் வணிக நிறுவனங்களில் குப்பை சேகரித்தல் என்னும் முதல் நிலைசேகரிப்பு (Primary Collection) மற்றும் 96Kmநீளத்திற்கு சாலைகளை புழுதியற்றசாலைகளாக பராமரித்தல், பேருந்து நிலையங்கள் (பாரதரத்னாMGR , தந்தை பெரியார் மற்றும் பாளை பேருந்து நிலையங்கள்) சுத்தம் செய்தல் ஆகியபணிகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை அரசாணை 116,நாள்:24.08.2022மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர்அவர்களின் செயல் முறை ஆணைகளின் R.O.C.No.35883/2022/EA1-SWM-13 படி,ராம் &கோஎன்னும் நிறுவனத்தால் ஒப்பந்த பணியாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலும் கீழ்க்கண்ட இதர அத்தியா வசிய பணிகளான

1. கழிவுநீரோடை தூர்வாருதல்

2. பூங்காக்கள் சுத்தம் செய்தல்
3. சமுதாயமற்றும் பொதுக் கழிப்பிடங்கள் (PT, CT) சுத்தம் செய்தல்
4. ஆக்ரமிப்புக்கள் அகற்றல்
5. காய்,கனிசந்தைசுத்தம் செய்தல்
6. நுண் உரமையங்கள் செயலாக்கபணிகள்
7. கோவில் திருவிழாபகுதிகளில் சுத்தம் செய்தல்
8. அரசுமற்றும் மாநகராட்சிகட்டிடங்களில் ஒட்டப்பட்டசுவரொட்டிகளைஅகற்றுதல்
9. மாநகராட்சிஅலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைவளாகங்கள் சுத்தம் செய்தல்
10. பிளாஸ்டிக் ரெய்டு,டெங்குதடுப்புபணிமற்றும் மாநகராட்சிஅவசியம் எனகருதும் இதரபணிகள்

ஆகிய மேற்கண்டபணிகளை01.09.2024 முதல்,ஒப்பந்தபுள்ளிநடைமுறைமுடியும் வரையில், தினசரி மேற்கொள்ளவும்,அதற்கானசெலவினத் தொகையை (மாவட்டஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலி மற்றும் 5%சேவைகட்டணம்) மாநகராட்சியில் பெற்றுக்கொள்ளவும் ராம்&கோ நிறுவனத்தை மாமன்றத்தின் முன் அனுமதியுடன் பணிக்கப்பட்டு, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.மேற் கூறப்பட்டுள்ள

1. கழிவுநீரோடை தூர்வாருதல்
2. பூங்காக்கள் சுத்தம் செய்தல்
3. சமுதாயமற்றும் பொதுக் கழிப்பிடங்கள் (PT, CT) சுத்தம் செய்தல்
4. ஆக்ரமிப்புக்கள் அகற்றல்
5. காய்,கனிசந்தைசுத்தம் செய்தல்
6. நுண் உரமையங்கள் செயலாக்கபணிகள்
7. கோவில் திருவிழாபகுதிகளில் சுத்தம் செய்தல்
8. அரசுமற்றும் மாநகராட்சிகட்டிடங்களில் ஒட்டப்பட்டசுவரொட்டிகளைஅகற்றுதல்
9. மாநகராட்சிஅலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைவளாகங்கள் சுத்தம் செய்தல்
10. பிளாஸ்டிக் ரெய்டு,டெங்குதடுப்புபணிமற்றும்

மாநகராட்சி அவசியம் என கருதும் இதர பணிகள் ஆகிய பணிகளை மேற்கொள்ள மண்டலசுகாதார ஆய்வாளர்கள், சுகாதாரஅலுவலர்கள் மற்றும் உதவி ஆணையாளர்கள் ஆகியோரால் கழிவு நீரோடைமற்றும் மழைநீர் வடிகால் நீளம்,பொதுக்கழிப்பிடங்களின் எண்ணிக்கை, பூங்காங்களின் எண்ணிக்கை,ஆகியவற்றின் அடிப்படையில் 722 நபர்கள் தேவையெனதெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே 722 தேவையின் அடிப்படையில் முதற்கட்டமாக 500 நபர்களை மாவட்டஆட்சித்தலைவர் அவர்களால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் ஈடுபடுத்திட ஒப்பந்தபுள்ளி கோரவும், அதற்கான மாதந்திர செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

கழிவுநீரோடை மற்றும் மழைநீர் வடிகால் நீளம், பொதுக்கழிப்பிடங்களின் எண்ணிக்கை பூங்காங்களின் எண்ணிக்கை, ஆகியவற்றின் அடிப்படையில் 722 நபர்கள் தேவையென்ற நிலையில் முதற்கட்டமாக 500 நபர்களைமாவட்டஆட்சித்தலைவர்அவர்களால், அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு (Out Sourcing) முறையில் ஈடுபடுத்திட ஒப்பந்தபுள்ளி கோரவும், அதற்கான மாதந்திர செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**எச்2/5456/2023**

---

**தீர்மானம் எண்:326 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

15. திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம் பேட்டை - பழையபேட்டை இணைப்பு சாலையில் சீர்மிகுநகரதிட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளTRUCK TERMINAL கட்டிடத்திற்கு,ஏற்கனவே கடந்த 12.01.2021, 27.01.2021, 25.02.2021 ஆகிய தேதிகளில் ஏலம் விடப்பட்டதில், ஏலம் ஏதும் போகவில்லை. மேற்படிகட்டிடம்,திருநெல்வேலிடவுண் பகுதியிலிருந்து 6.கி.மீ தொலைவில் உள்ளது. சரியான போக்குவரத்து வசதியில்லை. கட்டப்பட்டுள்ள கடைகள் மொத்த விற்பனை செய்திட போதிய இடவசதிமற்றும் உள்கட்டமைப்பு வசதி இல்லைஎனவும்,மேலும் பொதுமக்கள் வந்துசெல்வதற்குஉரியபாதுகாப்புவசதிகள் இல்லை எனவும், தற்போது ஏலத்தொகையை மறு நிர்ணயம் செய்துகுறைவானகுறுமத் தொகை நிர்ணயம் செய்திடவும், வருங்காலங்களில் சிறப்பாகசெயல்படும் பட்சத்தில் குறுமத் தொகையினை அதிகரித்து கொள்ளலாம் எனவியாபாரிகளின் சங்க பிரதநிதிகள் தெரிவித்தனர். அதன்படி கீழ்கண்டவிபரப்படி மாத வாடகை நிர்ணயம் செய்யலாம்.

| வரிசை எண் | விபரம் | கடைகளின் எண்ணிக்கை | அளவு (சதுரடியில்) | ஏற்கனவேநிர்ணயம் செய்யப்பட்டமாத வாடகை | மறு நிர்ணயம் செய்யப்பட்டமாதவாடகை | வைப்பு தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | புக்கிங் அறைகள் (தரை தளம்) | **4** | **272 sq ft** | **Rs.5000/-** | **Rs.3000/-** | **Rs.25000/-** |
| 2. | தங்கும் அறைகள் (தரை தளம்) | 8 | **272 sq ft** | **Rs**.4000/- | **Rs**.3000/- | **Rs**.25000/- |
| 3 | தங்கும் அறைகள் (முதல் தளம்) | 8 | **272 sq ft** | **Rs**.4000/- | **Rs**.2500/- | **Rs**.25000/- |
| 4 | தங்கும் அறைகள் (முதல் தளம் வடபகுதி) | 5 | **272 sq ft** | **Rs**.4000/- | **Rs**.2500/- | **Rs** 25000/- |
| 5 | விருந்தினர் தங்கும் அறைகள் (தரை தளம்) | **2** | **342 sq ft** | **Rs.7000/-** | **Rs.4000/-** | **Rs.25,000/-** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | சிற்றுண்டி (தரை தளம்தென்பக்கம்) | **1** | **1232 sq ft** | **Rs.15000/-** | **Rs.13000/-** | **Rs.50,000/-** |
| 7 | சிற்றுண்டி (தரை தளம் தங்கும் இடத்தின் உள்ளேஉள்ளது) | **1** | **1370sq ft** | **Rs.20000/-** | **Rs.15000/-** | **Rs.50,000/-** |
| 8 | கடைகள் | 10 | **150 sq ft** | **Rs.3000/-** | **Rs.2000/-** | **Rs.25,000/-** |
| 9 | கடைகள் | 2 | **228 sq ft** | **Rs.4500/-** | **Rs.3000/-** | **Rs.25,000/-** |
| | மொத்தம் | **41** | | | | |

லாரி/ மினிலாரிகள் நிறுத்துமிடம் (Truck Bay) மொத்தம் 90 உள்ளது. லாரிஒன்றுக்குநாள் ஒன்றுக்குரூ.20/- வீதம் மொத்தமுள்ள 90 லாரிநிறுத்தங்களில் தற்பொழுதுசெயல்பாடுகள் குறைவாகஉள்ளதால் நாள் ஒன்றுக்கு 50 லாரிகள் வீதம் வசூல் செய்யவருடத்திற்குரூ. 3,60,000/- (50 x20 x 30 x 12)எனஉத்தேசவருவாய் வருவதால்,ஏலதாரரின் பணியாளரின் செலவினம்,மின்கட்டணம் மற்றும் ஏலதாரின் வருமானம் 20%˙ (3,60,000 - 72,000) கழித்து ரூ.2,88,000/- குறுமத் தொகையாகநிர்ணயம் செய்வதுதொடர்பாகதற்போதுநடைமுறையில் உள்ளஅரசாணைஎண் (2ப) எண் 66 நகராட்சி நி ர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைநாள். 6.08.2024ன்படி வரியில்லா இனங்கள் மீதானவழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16.10.2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்திலும் முடிவுசெய்யப்பட்டுள்ளவிபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

## அலுவலககுறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம் பேட்டை - பழையபேட்டை இணைப்பு சாலையில் சீர்மிகுநகரதிட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளTRUCK TERMINAL கட்டிடத்திற்குதற்போதுஏலத்தொகையை மறு நிர்ணயம் செய்துகுறைவானகுறுமத் தொகைநிர்ணயம் செய்திடவும்,வருங்காலங்களில் சிறப்பாகசெயல்படும் பட்சத்தில் குறுமத் தொகையினைஅதிகரித்து கொள்ளலாம் என வியாபாரிகளின் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர். அதன்படியில் புக்கிங் ஆபீஸ்,உணவகம் மற்றும் தங்கும் விடுதிக்கு மாத வாடகை நிர்ணயம் செய்யவும் அதனைதொடர்ந்துலாரி/ மினிலாரிகள் நிறுத்துமிடம் (Truck Bay) மொத்தம் 90 உள்ளது. லாரிஒன்றுக்குநாள் ஒன்றுக்குரூ.20/- வீதம் மொத்தமுள்ள 90 லாரிநிறுத்தங்களில் தற்பொழுதுசெயல்பாடுகள் குறைவாகஉள்ளதால் நாள் ஒன்றுக்கு 50 லாரிகள் வீதம் வசூல் செய்யவருடத்திற்குரூ. 3,60,000/- (50 x20 x 30 x 12)எனஉத்தேசவருவாய் வருவதால்,ஏலதாரரின் பணியாளரின் செலவினம்,மின்கட்டணம் மற்றும் ஏலதாரின் வருமானம் 20%˙ (3,60,000 - 72,000) கழித்துரூ.2,88,000/- குறுமத் தொகையாகநிர்ணயம் செய்யவும் இப்பொருள் தொடர்பாகதற்போதுநடைமுறையில்

உள்ளஅரசாணைஎண் (2ப) எண் 66 நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைநாள். 6.08.2024ன்படி வரியில்லா இனங்கள் மீதானவழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16.10.2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்திலும் முடிவுசெய்யப்பட்டுள்ளவிபரம் மாமன்றம் முடிவுசெய்யலாம்.

**ந.க.எண். அ1/134/2020.**

**தீர்மானம் எண் 327 வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழு கூட்டத்தின் முடிவின் படி வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

**16.** திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், பேட்டை- பழையபேட்டை இணைப்பு சாலையில் சீர்மிகுநகர திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள மொத்த விற்பனை சந்தையில் (Whole Sale Market) உள்ள 92 கடைகள் மற்றும் 1 குளிர்சாதனஅறைசதுரஅடிக்குரூ. 75/- என பொதுப்பணித்துறை மூலம் நிர்ணயம் செய்து ஏற்கனவே கடந்த 12.07.2023, 26.02.204 மற்றும் 28.06.2024 ஆகிய தினங்களில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

வியாபாரிகளுடன் கலந்தாலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டதில் மொத்த விற்பனைசந்தைக்கு வந்து செல்வதற்கு பேருந்துவசதிகள் இல்லை எனவும், புறநகர் காவல் நிலையம் அமைக்க வேண்டும் எனவும்,மேற்படி சந்தைக்குஅருகில் மிகபெரியஅளவில் குடியிருப்புகளோ வணிகநிறுவனங்களோ ஏதுமில்லைஎனவும், நகர்புறத்திலிருந்துசுமார் 6 கி.மீ தொலைவில் இருப்பதாலும்,மக்கள் நடமாட்டம் மிககுறைவாக இருப்பதாலும், மேற்படி சந்தைகடைகளுக்கு முதலில் குறைவான வாடகை நிர்ணயம் செய்து மார்க்கெட் சிறப்பாக இயங்கும் பட்சத்தில் எதிர் காலத்தில் அதற்கேற்றவாறு வாடகையினை திருத்திஅமைக்கலாம் என வியாபாரிகளின் சங்க பிரதநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே மேற்படிரூ.75/- எனநிர்ணயம் செய்து ஏலம் போகாததால் தற்பொழுது சதுரஅடிக்கு ரூ.30/- என மறு நிர்ணயம் தொடர்பாகதற்போதுநடைமுறையில் உள்ள அரசாணைஎண் (2ப) எண் 66 நகராட்சி நி ர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைநாள். 6.08.2024ன்படி வரியில்லா இனங்கள் மீதான வழி காட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16.10.2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டுள்ளவிபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

**அலுவலககுறிப்பு:**

திருநெல்வேலிமாநகராட்சி,திருநெல்வேலிமண்டலம்,பேட்டை-பழையபேட்டை இணைப்பு சாலையில் சீர்மிகு நகரதிட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள மொத்த விற்பனைசந்தையில் (Whole Sale Market) உள்ள 92 கடைகள் மற்றும் 1 குளிர்சாதனஅறை பொதுப்பணித்துறை மூலம் நிர்ணயம் செய்து ஏற்கனவே மேற்படிரூ.75/- எனநிர்ணயம் செய்து ஏலம் போகாததால் தற்பொழுது சதுரஅடிக்குரூ.30/- என மறு நிர்ணயம் தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ளஅரசாணை எண் (2ப) எண் 66 நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைநாள். 6.08.2024ன்படி வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16.10.2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டுள்ள விபரம் மாமன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண். அ1/125/2019.**

**தீர்மானம் எண்:328 வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழு கூட்டத்தின் முடிவின் படி வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

17.திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் புதியதாககட்டப்பட்ட 30 (தரைதளத்தில் 14ம்,முதல் தளத்தில் 16) கடைகளில் ஏலம் விடப்பட்டகடைகள் தவிர மீதமுள்ள 11(3 தரைதளம் 8 முதல்தளம்) கடைகளுக்கு 23-10-2024அன்றுஏலம்/ ஒப்பந்தபுள்ளி நடைபெற்றது. அதில் கடைஎண். **G32**க்கு மட்டும் இருவர் ஏலத்தில் கலந்து கொள்ள விண்ணப்பித்தில் ஒருவர் மட்டும் வைப்புத்தொகை செலுத்தி ஏலக்கேள்வியில் கீழ்க்கண்டவாறு கேள்வி கேட்டுள்ளார்.

| **கடை எண்** | **ஏலதாரரின் பெயர்மற்றும் முகவரி** | **வைப்புத்தொகை செலுத்திய விபரம்** | **உச்ச ஏல கேள்வி தொகை** |
|---|---|---|---|
| **G32** | திருமதி. S.முத்துசெல்வி<br>க/பெ.சுடலைக்கண்ணு<br>19, பாண்டித்துரை 1வது தெரு,<br>குலவணிகர்புரம், பாளையங்கோட்டை<br>627 005 | ரூ.33,360/-<br>(STATE BANK OF INDIA<br>DD No. 997506<br>Dt.22-10-2024<br>PALAYAMKOTTAI<br>Branch) | ரூ.13,950/- |

திருமதி. S.முத்துசெல்வி என்பவர் ஏல நிபந்தனைகளின்படி கடை எண் **G32**-க்கு வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் மட்டும் கலந்து கொண்டார். ஒப்பந்தபுள்ளியாரும் கோரவில்லை. அன்னாரின் உச்ச ஏலக்கேள்வியாகரூ.13,950/- கேட்டுள்ளார். வேறு யாரும் கலந்து கொள்ளவில்லை. இந்தஏலமானதுபலமுறைகோரப்பட்டும் எவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை. எனவேஏலதாரர் S.முத்துசெல்விஎன்பவர் மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையை விடரூ.50/- கூடுதலாகஏலம் கேட்டுள்ளார். ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. எனவே கூடுதலாக கேட்டுள்ள திரு.S.முத்துசெல்வி என்பவருக்கு கடைஎண் **G32**-ஐ வழங்கு வதுகுறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலககுறிப்பு:-**

பொருளில் கண்டுள்ள தரைதள கடைஎண்**G32** கடைக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகைரூ.13,900/-ல் அன்னாரின் உச்ச ஏலக்கேள்வியாக ரூ.13,950/- கேட்டுள்ளார். மேற்படித் தொகையானது மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையைவிட ரூ.50/- கூடுதலாககேட்டுள்ளார். ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. எனவே கூடுதலாகஏலம் கேட்டுள்ள திரு.S.முத்துசெல்வி, என்பவருக்கு கடைஎண் **G32**-ஐ வழங்குவது குறித்து மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

**ந.க.எண்.அ1/4642/2021(பா.வா)**

**தீர்மானம் எண்:329 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

18. இம் மாநகராட்சியில் துவக்கப் பள்ளிகள் 33 எண்ணம், நடுநிலைப் பள்ளிகள் 6 எண்ணம், உயர்நிலைப்பள்ளி 3 எண்ணம் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் 5 எண்ணம் ஆக மொத்தம் 47 எண்ணம் பள்ளிகள் மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகள் உள்ளது. பள்ளிக்கட்டிடங்களில் உள்ள கழிப்பிடங்கள் மற்றும் பள்ளிவளாகங்களில் தூய்மைப்பணிகளை மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட அரசாணையின்படி, பணிகளை மேற்கொள்வதற்கு பணியமர்த்திக் கொள்வதற்கும் அதற்காகும் செலவினத் தொகையினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளலாம் எனவும் கீழ்க்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :-

G.O.(MS)No.166 Municipal Administration and Water Supply (MAIV) Department dated 23.11.2016

| வ.எண் | விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் விபரம் | | பள்ளி வளாகத்தில் தூய்மை பணிக்கு |
|---|---|---|---|---|
| | | கழிப்பிடம் தூய்மை பணிக்கு | | |
| 1 | ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலின மாணவர்கள் பயின்று வரும் பள்ளி ஒன்றுக்கு | பெண் தூய்மை பணியாளர் 1 எண்ணம் | ஆண் தூய்மை பணியாளர் 1 எண்ணம் | 1 எண்ணம் |
| 2 | பெண்கள் மட்டும் பயின்று வரும் பள்ளி ஒன்றுக்கு | பெண் தூய்மை பணியாளர் 2 எண்ணம் | - | 1 எண்ணம் |

அதன்படி, இம்மாநகராட்சியில் பெண்கள் மட்டும் கல்வி பயின்று வரும் 5 எண்ணம் மேல்நிலைப்பள்ளிகள், ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலின மாணவ/ மாணவியர்கள் பயின்று வரும் 33 எண்ணம் ஆரம்ப பள்ளிகள், 6 எண்ணம் நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 3 எண்ணம் உயர்நிலைப்பள்ளி, ஆக மொத்தம் 47 எண்ணம் பள்ளிகளில் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட விபரப்படி பணியாளர்கள் தேவைப்படுகின்றது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ.எண் | விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியாளர்கள் விபரம் | | பள்ளி வளாகத்தில் தூய்மை பணிக்கு |
|---|---|---|---|---|
| | | கழிப்பிடம் தூய்மை பணிக்கு | | |
| 1 | ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலின மாணவர்கள் பயின்று வரும் பள்ளி ஒன்றுக்கு | பெண் தூய்மை பணியாளர் 1 எண்ணம் | ஆண் தூய்மை பணியாளர் 1 எண்ணம் | 1 எண்ணம் |
| | 33 எண்ணம் பள்ளிகள் | 33 நபர்கள் | 33 நபர்கள் | 33 நபர்கள் |
| 2 | பெண்கள் மட்டும் பயின்று வரும் பள்ளி ஒன்றுக்கு | பெண் தூய்மை பணியாளர்கள் 2 எண்ணம் | --- | 1 எண்ணம் |
| | உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி 8 எண்ணம் பள்ளிகள்நடுநிலைப்பள்ளி 6 எண்ணம் | 16 நபர்கள்<br>6 நபர்கள் | --- | 14 நபர்கள் |
| | மேற்பார்வையாளர்கள் | 2 நபர்கள் | 2 நபர்கள் | |
| | மொத்தம் தேவைப்படும் பணியாளர்கள் | 57 பணியாளர்கள் | 35 பணியாளர்கள் | 47 பணியாளர்கள் |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டவாறு அரசாணையின்படி மாநகராட்சி பள்ளிகள் 47 எண்ணங்களுக்கு, கழிப்பிட தூய்மை பணிக்கு 57 பெண் தூய்மைப் பணியாளர்களும், 35 ஆண் தூய்மைப்பணியாளர்கள் மற்றும் பள்ளி வளாகத்தில் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்கு 47 ஆண் தூய்மை பணியாளர்கள் என ஆக மொத்தம் 139 எண்ணம் தூய்மைப் பணியாளர்கள் தேவைப்படுகின்றது.

மேற்படி பணியாளர்களை பணியமர்த்திக் கொள்வதற்கு மாவட்ட ஆட்சித்லைவர் தலைவர் அவர்களின் 2022-23ம் ஆண்டுக்கான விலை விகித அட்டவணை பட்டியல் படி நாள் ஒன்றுக்கான ஊதியம் ரூ.430/- வீதம் ஐந்து மாத காலத்திற்கு ஆகும் செலவினத் தொகை விபரம் பின்வருமாறு:-

| No.of days | No. of Sanitary workers | Description of work | Rate per day | Amount |
|---|---|---|---|---|
| 150 days | 139 Nos | Selection of sanitary worker to engage the school sanitation work (47 Schools) | 430/- | 89,65,500 |
| 150 days | 139 Nos | EPF – 13.36% | 57.45 | 11,97,832 |
| 150 days | 139 Nos | ESI – 4.75 % | 20.71 | 4,31,803 |
| Total | | | | 1,05,95,135 |
| GST 18% | | | | 19,07,124 |
| Service Charges 5% (Rs.89,65,500/-) | | | | 4,48,275 |

ஏற்கனவே,மாமன்ற அவசரக்கூட்ட தீர்மானம் எண் 174, நாள்: 28.10.2022ல் 100 தூய்மை பணியாளர்களுக்கு மதிப்பீடு தொகை ரூ. 95.50 லட்சத்திற்கு 150 நாட்களுக்கு மாமன்றத்தில் அனுமதி பெறப்பட்டு பின்னர் மாண்புமிகு மேயர் அவர்களின் 06/02/2023 தேதி முன்அனுமதியுடன், மெர்சஸ் ஜெயராம் வென்ட்சர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 430/- சம்பளம் அதற்கான EPF 13.36% (57.45) ESI 4.75% (20.71) மற்றும் GST 18% ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் படி 01/03/2023 முதல் 31/07/2023 வரையிலான காலத்திற்கு மேற்படி பணி செய்து முடிக்க அனுமதி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வேலை உத்தரவு அடிப்படையில் 01.03.2023 முதல் 31.07.2023 முடிய ஐந்து மாத காலம் 139 தூய்மை பணியாளர்களை பணியமர்த்தி 47 மாநகராட்சி பள்ளி கட்டிடங்கள் தூய்மைபணி மேற்கொண்டுள்ளனர். அதன் பிறகு மாமன்ற அவசரக் கூட்டம் தீர்மானம் எண் 300 நாள் : 29/05/2023 ன் படி மெர்சஸ் ஜெயராம் வென்ட்சர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்ளப்பட்டது.

தற்பொழுது ஒப்பந்த காலம் 31.07.2023 உடன் முடிவு பெற்றதால், மேற்படி வேலையின் அவசரத்தை கருதி, தூய்மைப் பணிகளை மேற்கொள்ளப்பட்டதற்கும், மேற்கொள்வதற்கும் மெர்சஸ் ஜெயராம் வென்ட்சர்ஸ் நிறுவனம் மூலம் ஏற்கனவே அன்னார்கள் கொடுத்துள்ள விலை விகிதத்தின் அடிப்படையில் 01.08.2023 முதல் தொடர்ந்து வேலை செய்தவதற்கு 24.08.2023 ல் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு,01.08.2023 முதல் 30.12.2023 முடிய ஐந்து மாதங்களுக்கு தொடர்ந்து 139 தூய்மை பணியாளர்களை வைத்து வேலை பார்த்தமைக்கு தொகை வழங்கியமைக்கு (5மாதம் தொகை ரூ.1,00,14,944/-) மாமன்றத்தின் பின்னேற்புக்கும், 01.01.2024 முதல் ஓராண்டு காலத்திற்கு ஜெயராம் வென்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும், 01.01.2024 முதல் 31.07.2024 முடிய ஏழு மாதங்களுக்கு தொடர்ந்து 139 தூய்மை பணியாளர்களை வைத்து வேலை பார்த்தமைக்கு(7 மாதம் தொகை ரூ.1,38,96,170/-)

தொகை வழங்கியமைக்கு பின்னேற்புக்கும், 01.08.2024 முதல் 31.12.2024 வரை 150 நாட்களுக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு புதிய ஒப்பந்தகாரர் தேர்வு செய்யும் வரை, ஏற்கனவே பராமரிப்பு பணிகள் செய்து வரும் மெர்சஸ் ஜெயராம் வெண்ட்சர்ஸ் நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கும், பார்வைக்கும்.

ஆ) மேற்படி ஒப்பந்த நிறுவனமான மெர்சஸ் ஜெயராம் வெண்ட்சர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்த காலம் நிறைவுற்றபடியால், புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும்.

**அலுவலககுறிப்பு**

மேற்படி வேலைகளை செய்வதற்கு ஒப்பந்துபுள்ளி கோரி புதியதாக ஒப்பந்தகாரர் தேர்வு செய்யும் வரை 01.12.2023 முதல் மெர்சஸ் ஜெயராம் வெண்ட்சர்ஸ் நிறுவனம் மூலம் ஏற்கனவே கொடுத்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் 139 துாய்மை பணியாளர்களைக் கொண்டு தொடர்ந்து பணி மேற்கொண்டமைக்கு தொகை வழங்கியமைக்கு (5மாதம் தொகை ரூ.1,00,14,944/-) மாமன்றத்தின் பின்னேற்புக்கும், 01.01.2024 ஓராண்டு காலத்திற்கு தொடர்ந்து மெர்சஸ் ஜெயராம் வெண்ட்சர்ஸ் நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ளவும், 01.01.2024 முதல் ஓராண்டு காலத்திற்கு ஜெயராம் வெண்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும், 01.01.2024 முதல் 31.07.2024 முடிய ஏழு மாதங்களுக்கு தொடர்ந்து 139 துாய்மை பணியாளர்களை வைத்து வேலை பார்த்தமைக்கு (7 மாதம் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1,38,96,170/-) தொகை வழங்கியமைக்கு பின்னேற்புக்கும், 01.08.2024 முதல் 31.12.2024 வரை 150 நாட்களுக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு புதிய ஒப்பந்தகாரர் தேர்வு செய்யும் வரை, ஏற்கனவே பராமரிப்பு பணிகள் செய்து வரும் மெர்சஸ் ஜெயராம் வெண்ட்சர்ஸ் நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி ஒப்பந்த நிறுவனமான மெர்சஸ் ஜெயராம் வெண்ட்சர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்த காலம் நிறைவுற்றபடியால், மேற்படி பணியாளர்களை பணியமர்த்திக் கொள்வதற்கு மாவட்ட ஆட்சித்லைவர் தலைவர் அவர்களின் ' R.C..M3/1360/2024 நாள்: 20.06.2024ன்படி 2024-2025ம் ஆண்டுக்கான விலை விகித அட்டவணை பட்டியல் படி நாள் ஒன்றுக்கான ஊதியம் ரூ.520/- வீதம் மூன்று மாத காலத்திற்கு ஆகும் செலவினத் தொகை விபரம் பின்வருமாறு:

| No.of days | No. of Sanitary workers | Description of work | Rate per day | Amount |
|---|---|---|---|---|
| 89 days | 139 Nos | Selection of sanitary worker to engage the school sanitation work (47 Schools) | 520/- | 6432920 |
| 89 days | 139 Nos | EPF – 13.36% | 58.78 | 729889 |
| 89 days | 139 Nos | ESI – 4.75 % | 20.9 | 259791 |
| Total | | | | 7422600 |
| GST 18% | | | | 11,57,926 |
| Service Charges 5% | | | | 3,21,646 |
| Total Amount | | | | 89,02,172 |

மேற்கண்ட அட்டவணையின் படி புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்:330 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது,

---

19. திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் வார்டுஎண் 50க்கு உட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் புதிய தெருவிளக்கு அமைத்துதர 50வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

1) பாத்திமாநகர் (Societyநகர்) பகுதியில் - 15 எண்ணம்
2) 5பூ நகர் பகுதியில் - 15 எண்ணம்
3) சித்திக் நகர் முதல் தெரு - நேருநகர் 3வது தெருசந்திக்கும் கடைசிபகுதியில் - 1 எண்ணம்,
4) சித்திக் நகர் மேற்குதெருகடைசிபகுதியில் - 3 எண்ணம்,
5) பூங்காநகர் பகுதியில் - 4 எண்ணம்,
6) ஹவ்வாநகர்,பாத்திமாநகர் பகுதியில் - 2 எண்ணம்

மேற்கண்டவாறு மொத்தம் 40 எண்ணம் 40W LED தெருவிளக்குகள் அமைக்க உத்தேசமாக ரூ.10.00/- லட்சம் செலவாகும். மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும்.

**அலுவலககுறிப்பு :**

மேற்காணும் பொருளில் கண்டுள்ள இடங்களில் போதிய தெரு விளக்கு வசதி இல்லாததால் பொதுமக்கள் இரவுநேரங்களில் நடமாடமிகவும் சிரமப்படுகின்றனர். எனவேமேற்கண்டவாறுமொத்தம் 40 எண்ணம் 40W LED தெரு விளக்குகள் அமைக்க ஆகும் உத்தேச செலவுத் தொகைரூ. 10.00/- லட்சத்திற்கு மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

**இ2 / 5442 / 2024**

**தீர்மானம் எண்:331 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

20. திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், பகுதிகளில் 17.12.2023 முதல் 22.12.2023 வரைபெய்த கனமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக கால்வாய்களில் உள்ள அடைப்புகளில் தேங்கியுள்ள மழைநீரை அப்புறப்படுத்துவதற்கும் மற்றும் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.285000/-க்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன்கீழ் ஆணையாளர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டமைக்கும் மற்றும் மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் M/s.Marshal Vignesh & Coஅவர்களால் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகைரூ.270250/-ஐ ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்டவாறு, திருநெல்வேலி மாநகராட்சி,தச்சநல்லூர் மண்டலம், பகுதிகளில் 17.12.2023 முதல் 22.12.2023 வரைபெய்தகனமழையின் காரணமாகஏற்பட்டவெள்ளப்பெருக்கின் காரணமாக கால்வாய்களில் உள்ளஅடைப்புகளில் தேங்கியுள்ளமழைநீரைஅப்புறப்படுத்துவதற்கும் மற்றும் அப்பகுதி பொது மக்களுக்குகுடிநீர் வழங்குவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகைரூ.285000/-க்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் ஆணையாளர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டமைக்கும் மற்றும் மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் M/s.Marshal Vignesh & Coஅவர்களால் மேற்கொள்ளப்பட்டு அதற்கான பட்டியல் தொகைரூ.270250/-ஐ ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.
**மதிப்பீடுஎண்: 164/2023-24)**

**தீர்மானம் எண்: 332 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

21. மாமன்ற தீர்மானம் எண். 555, நாள்: 04.10.2023ல், திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ள வ.உ.சி. மைதானம், பாரம்பரிய சின்னமான மேடை காவல்நிலையம், ஆகியவற்றை பராமரித்திடவும், அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் விபரத்தினை பதிவேடுகளில் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள மேலாளர்களை பணியில் ஈடுபடுத்திட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் படி வ.உ.சி மைதானம் மற்றும் மேடை காவல் நிலையம் ஆகிய இடங்களில் 2 டெக்ஸ்கோ மேலாளர்கள் பணிபுரிந்து வந்தனர். அவர்களில் ஒருவர் 29.02.2024 அன்று தனது பணியினை இராஜினாமா செய்துவிட்டபடியால், தற்போது ஒரு மேலாளர் மட்டும் பணி புரிந்து வருகிறார். அவரை பணியில் ஈடுபடுத்திட டெக்ஸ்கோ நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் 16.11.2024-வுடன் முடிவடையவுள்ளது. அவருக்கு தற்போது மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் தொகை விபரம் பின்வருமாறு.

| வ.எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை | ஒரு மேலாளருக்கு ஒரு மாதத்திற்கான தொகை |
|---|---|---|---|
| 1. | மேலாளர் | 1 | ரூ. 31358/- (சேவைக் கட்டணம் 8% மற்றும் GST 18% தனி) |

எனவே மேற்படி பணிகளின் அவசியம் கருதி, டெக்ஸ்கோ மேலாளர் பணியினை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்க பாளையங்கோட்டை மண்டல உதவி ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு மேலாளரை 17.11.2024 முதல் 16.11.2025 முடிய மேலும் ஒரு வருட காலத்திற்கு பணியில் ஈடுபடுத்திடவும், அதற்கான செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்காக முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் மூலம் ஒரு டெக்ஸ்கோ மேலாளரை ஒப்பந்த அடிப்படையில் 17.11.2024 முதல் 16.11.2025 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும், அதற்கான செலவினங்களுக்கும், அவ்வப்போது அரசால் உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(சி2/8109/2018) மைய அலுவலகம்**

**தீர்மானம் எண்:333 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**22.** திருநெல்வேலி மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள பிரிண்டர்களில் Toner refill, recondition, blade change ஆகிய பணிகளை மேற்கொள்ள ஓராண்டிற்கு ரூ. 50,000/- மதிப்பீட்டில் 26.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. M/S. ARO Systems, M/S. Avalon Data Products என்ற இரண்டு நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. இரண்டு நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S. ARO Systems நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி ஏற்றுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள பிரிண்டர்களில் Toner refill, recondition, blade change ஆகிய பணிகளை ஓராண்டிற்கு மேற்கொள்ள 26.09.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. M/S. ARO Systems, M/S. Avalon Data Products என்ற இரண்டு நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. இரண்டு நிறுவனங்களும் குறைந்த பட்ச தகுதிகளை பூர்த்தி செய்ததாலும், வைப்புத் தொகை செலுத்தியிருந்ததாலும், விலைப்புள்ளி உறை (Financial bid) ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு முன்னிலையில் அன்றைய தினமே திறக்கப்பட்டது. M/S. ARO Systems, பாளையங்கோட்டை நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி பட்டியலில் குறிப்பிட்டுள்ள வரிசை எண். 1 முதல் 17 வரையிலான பிரிண்டர்களுக்கு மேற்கண்ட பணிகளை செய்வதற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர். (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், M/S. ARO Systems வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(சி2/6015/2024 மைய அலுவலகம்)**

**தீர்மானம் எண்: 334 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**23.** திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டல பகுதிகளில் 17.12.2023 ஆம் ஆண்டு அதிதீவிர கனமழையின் காரணமாக மாநகரின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்தது. இதனால் வீடுகளில் இருந்து நனைந்த துணிகள், போர்வைகள், மெத்தை, தலையணைகள், பயன்படுத்த முடியாத சோபாக்கள், குசன் சேர்கள் நனைந்து சேதமுற்ற அரிசி பருப்பு போன்ற உணவு பொருட்கள் ஆகியவை ஏராளமான கழிவு பொருட்களாக வெளியேற்றப்பட்டது. இதனால் அதிக அளவு கழிவு பொருட்கள் வருவதை அடுத்து அவற்றை உடனுக்குடன் அப்புறப்படுத்த ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி மண்டலங்களில் தேவைக்கேற்ப SECONDARY COLLECTION POINT உருவாக்கி அங்கிருந்து வாடகை அடிப்படையில் JCB மற்றும் லாரிகள் மூலமாக அகற்றிட குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. R.K. Enterprises, Tirunelveli என்ற நிறுவனம் JCB ஒருமணி நேரத்திற்கு ரூ. 925/- வீதம் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் ரூ. 11,100/- வீதம் 5 நாட்களுக்கு மொத்தம் ரூ. 55,500/- மற்றும் டிப்பர் லாரி ஒரு மணி நேரத்திற்கு ரூ. 850/- வீதம் இரண்டு டிப்பர் லாரிகள் ஒரு நாளைக்கு 20,400/- வீதம் 5 நாட்களுக்கு மொத்தம் ரூ. 1,02,000/- ஆகும். ஒரு JCB மற்றும் இரண்டு டிப்பர் லாரிகள 5 நாட்களுக்கு பயன்படுத்திய வகைக்கு உத்தேச

மதிப்பீட்டு தொகை ரூ. 1,57,000/-ஐ த்திற்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்தின் பட்டியல் தொகை ரூ. 1,57,000/- ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் 17.12.2023 அன்று பெய்த அதிதீவிர கனமழையின் காரணமாக SECONDARY COLLECTION POINT உருவாக்கி அங்கிருந்து வாடகை அடிப்படையில் JCB மற்றும் லாரிகள் மூலமாக அகற்றிட குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. R.K. Enterprises, Tirunelveli என்ற நிறுவனம் JCB ஒருமணி நேரத்திற்கு ரூ. 925/- வீதம் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் ரூ.11,100/- வீதம் 5 நாட்களுக்கு மொத்தம் ரூ. 55,500/- மற்றும் டிப்பர் லாரி ஒரு மணி நேரத்திற்கு ரூ. 850/- இரண்டு டிப்பர் லாரிகள் ஒரு நாளைக்கு 20,400/- வீதம் 5 நாட்களுக்கு மொத்தம் ரூ. 1,02,000/- ஆகும். ஒரு JCB மற்றும் இரண்டு டிப்பர் லாரிகள 5 நாட்களுக்கு பயன்படுத்திய வகைக்கு உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 1,57,000/- த்திற்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி நிறுவனத்தின் பட்டியல் தொகை ரூ. 1,57,000/ஐ வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

**சி2/918/2022**

**தீர்மானம் எண்: 335 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**24.** திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 12, உடையார்பட்டி சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி ரங்கநாதன் நடுநிலைப்பள்ளி பள்ளியின் உட்புறம் மற்றும் சாலைமுழுவதும் 17.12.2023 முதல் 22.12.2023 பெய்தகனமழையின் காரணமாக அப்பகுதிமிகவும் பாதிக்கப்பட்டது. இதனால் அங்குபயின்றுவரும் பள்ளிமாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுவந்தனர். எனவே அப்பகுதியில் சரல் கற்கள் கொண்டு பாதை அமைத்திடஆணையாளர் அவர்களிடம் கோரிக்கைவைத்தனர். கோரிக்கை வைத்ததன் பேரில் மாநகராட்சி பள்ளியின் உட்புறம் சரல் கற்களைகொண்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்படும் வகையில் பள்ளியின் உட்புறபகுதியில் சாலைஅமைத்துகொடுப்பதற்குதயார் செய்யப்பட்டமதிப்பீடு தொகைரூ. 82000/- க்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7)-ன் கீழ் ஆணையாளர் அவர்களால் நிர்வாகஅனுமதிவழங்கப்பட்டமைக்கும் அதனை தொடர்ந்து பணியினை மேற்கொண்டமைக்கு தொகைரூ.65,922/-ஐ M/s. S. Vellapandi& Co நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:-**

பொருளில் கண்டவாறு, திருநெல்வேலி மாநகராட்சி,தச்சநல்லூர் மண்டலம்,வார்டுஎண் 12,உடையார்பட்டிசாலையில் அமைந்துள்ளமாநகராட்சிரங்கநாதன் நடுநிலைப்பள்ளிபள்ளியின் உட்புறம் மற்றும் சாலைமுழுவதும் 17.12.2023 முதல் 22.12.2023 பெய்தகனமழையின்

காரணமாகஅப்பகுதிமிகவும் பாதிக்கப்பட்டது. இதனால் அங்குபயின்றுவரும் பள்ளிமாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுவந்தனர். எனவேஅப்பகுதியில் சரல் கற்கள் கொண்டுபாதை அமைத்திட ஆணையாளர் அவர்களிடம் கோரிக்கைவைத்தனர். கோரிக்கை வைத்ததன் பேரில் மாநகராட்சிபள்ளியின் உட்புறம் சரல் கற்களை கொண்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்படும் வகையில் பள்ளியின் உட்புறபகுதியில் சாலை அமைத்து கொடுப்பதற்குதயார் செய்யப்பட்டமதிப்பீடுதொகைரூ. 82000/- க்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57(7)-ன் கீழ் ஆணையாளர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டமைக்கும் அதனை தொடர்ந்து பணியினை மேற்கொண்டமைக்கு தொகை ரூ.65,922/-ஐ M/s. S. Vellapandi& Co நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

(மதிப்பீடுஎண் 166/2023-24)

**தீர்மானம் எண்: 336 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**25.** திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், சீர்மிகு நகரத்திட்டம் (Smart City) கீழ் புதியதாக கட்டப்பட்ட பெரியார் பேருந்து நிலையத்தில் மொத்தம் 41கடைகள் உள்ளன. 41 கடைகளுக்கும் 11.12.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 41 கடைகளில் தரைதளத்தில் உள்ள 2 கடைகள் மட்டும் திரு. P. குமார் என்பவர் மாத வாடகையாக G9 கடைக்கு ரூ. 1,60,000 மற்றும் G10கடைக்குரூ. 2,01,000 என உயர்ந்த பட்ச ஏலம் கோரப்பட்டு மாமன்ற தீர்மான எண் 130 நாள்: 15.07.2024ன் படி மாமன்ற ஒப்புதல் பெற்று குத்தகை விதிகளின்படி கடையை ஒப்படைப்பு செய்ய ஏதுவாக 12 மாத வாடகை முன் வைப்புத் தொகையாக ரூ.43,32,000/- (இரண்டு கடைகளுக்கு) செலுத்த கோரி இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண். அ1/4776/2023/ நாள்: 2.8.2024 அனுப்பியும் தனியர் இதுகாலம் 12 மாதவாடகை முன்பணம் செலுத்தவில்லை. கடையினை நடத்திட முன் வரவில்லை.

முதல் தளத்தில் 15 கடைகள், இரண்டாம் தளத்தில் 12, மூன்றாம் தளத்தில் 12 கடைகள் ஆகமொத்தம் 39 கடைகள் உள்ளன. மேற்படி 39 கடைகளுக்கும் ஏற்கனவே முதல் தளத்திற்கு சதுர அடி ஒன்றுக்குரூ. 150/- எனவும், இரண்டாம் தளத்திற்குரூ.125/- எனவும், மூன்றாம் தளத்திற்குரூ.100/- எனவும், ஏலம் விடப்பட்டதில் ஏலம் கேள்வி யாரும் கேட்க வராததால் மறுஏலம் கொண்டுவர ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி கடைகளின் முகப்பு, பேருந்து நிலையத்தின் உட்புறமாக உள்ளது. சந்திப்பு பேருந்து நிலையத்தின் அருகே உள்ள தனியாருக்குப் பாத்தியப்பட்ட கடைகளுக்கு கீழ்கண்டவாறு தனி நபர்களால் வாடகை வசூல் செய்யப்பட்டுவருகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | மொத்தசதுர அடி | மாதவாடகை | 1 சதுரஅடிக்கு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | செந்தூர் ரெடிமேட் | 300 x 2 = 600 | 24,350/- | 41/- |
| 2 | ஈகிள் புக்சென்டர் | 300 x 2 = 600 | 24,350/- | 41/- |
| 3 | சிவாமொபைல் | 300 x 2 = 600 | 25,488/- | 41/- |
| 4 | நியூ ஸ்டார் சூட்கேஸ் | 300 | 9,153/- | 31/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | சன் ஆப்டிக்கல்ஸ் | 300 | 10,620/- | 35/- |
| 6 | ராஜேஸ் எலக்ரிக்கல்ஸ் | 300 x 2 = 600 | 18,306/- | 31/- |
| 7 | பிரைட் ஆப்டிக்கல்ஸ் | 236.25 | 9,000/- | 38/- |
| 8 | எலைட் ஆப்டிக்கல்ஸ் | 309 | 7,800/- | 25/- |
| 9 | ராஜ் லெட்சுமிஎலக்ரிக்கல்ஸ் | 340 | 8,000/- | 24/- |
| 10 | மெஞ்சாய் மென்ஸ்வேர் ரெடிமேட் | 425 x 2 = 850 | 30,000/- | 50/- |
| 11 | தங்கையாசுவீட் | 1480 | 1,25,000/- | 84/- |

மேற்படிகடைகளை உதவிவருவாய் அலுவலர் மூலம் நேரில் விசாரணை செய்யப்பட்டது. மேலும் பொதுப்பணித்துறை வழி காட்டுதல் மதிப்பு அடிப்படையில் (PWDSCHEDULE OF RATE)ரூ. 32/- என உள்ளது.

மேற்படிகட்டிடம் கட்டப்பட்டுசுமார் ஒருவருடம் ஆனநிலையில் மாநகராட்சிக்குஏற்படும் தொடர் வருவாய் இழப்பினைதவிர்க்கும் பொருட்டுமுதல் தளத்திலுள்ள கடைகளுக்கு ஒருசதுரஅடிக்கு ரூ. 50/-ம், இரண்டாம் தளத்திற்குசதுரஅடிக்குரூ.40/- மூன்றாம் தளத்திற்கு ரூ.30/-என மறு நிர்ணயம் செய்திட தற்போது நடை முறையில் உள்ளஅரசாணைஎண் (2ப) எண் 66 நகராட்சி நி ர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைநாள். 6.08.2024ன்படி வரியில்லா இனங்கள் மீதான வழி காட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16.10.2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

**அலுவலககுறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், சீர்மிகுநகரத்திட்டம் (Smart City) கீழ் புதியதாக கட்டப்பட்ட பெரியார் பேருந்து நிலையத்தில் மொத்தம் 41கடைகள் உள்ளன. முதல் தளத்தில் 15 கடைகள், இரண்டாம் தளத்தில் 12, மூன்றாம் தளத்தில் 12 கடைகள் ஆக மொத்தம் 39 கடைகள் உள்ளன. மேற்படி 39 கடைகளுக்கும் ஏற்கனவே முதல் தளத்திற்கு சதுர அடி ஒன்றுக்குரூ. 150/- எனவும், இரண்டாம் தளத்திற்குரூ.125/- எனவும், மூன்றாம் தளத்திற்கு ரூ.100/- எனவும், ஏலம் விடப்பட்டதில் ஏலம் கேள்வி யாரும் கேட்க வராததால் மேற்படி கட்டிடம் கட்டப்பட்டு சுமார் ஒருவருடம் ஆனநிலையில் மாநகராட்சிக்குஏற்படும் தொடர் வருவாய் இழப்பினைதவிர்க்கும் பொருட்டுமுதல் தளத்திலுள்ளகடைகளுக்குஒருசதுரஅடிக்குரூ. 50/-ம், இரண்டாம் தளத்திற்குசதுரஅடிக்குரூ.40/- மூன்றாம் தளத்திற்குரூ.30/-என மறு நிர்ணயம் செய்திடதற்போதுநடைமுறையில் உள்ளஅரசாணைஎண் (2ப) எண் 66 நகராட்சி நி ர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைநாள். 6.08.2024ன்படி வரியில்லா இனங்கள் மீதானவழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் 16.10.2024 தேதியில் நடைபெற்ற கூட்டத்திலும் முடிவுசெய்யப்பட்டுள்ளவிபரம் மாமன்றம் முடிவுசெய்யலாம்.

ந.க.எண். அ1/4776/2023.

**தீர்மானம் எண்:337. வரியில்லா இனங்கள் மீதான வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவின் கூட்டத்தின் முடிவின்படி வாடகை நிர்ணயம் செய்திட அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.**

---

26.திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம், பகுதிகளில் 17.12.2023 முதல் 22.12.2023 வரை பெய்த கனமழையின் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மாநகராட்சியின் தாழ்வான பகுதிகளில் உள்ள பொது மக்கள் சமுதாய கூடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.மாநகராட்சி, வருவாய் துறை ஆகிய துறைகள் மூலம் பாதுகாக்கப்பட்டு வந்தனர். தாழ்வான பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினை தடுப்பதற்கு 400 Bags மணல் மூட்டைகள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57 (7)ன் கீழ் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின் படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.41,000/-க்கு ஆணையாளர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கபட்டமைக்கும் அதனை தொடர்ந்து பணியினை மேற்கொண்டமைக்கு தொகை ரூ.38080/-ஐ M/s. S.Vellapandi &Co நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொருளில் கண்டவாறு, திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம், பகுதிகளில் 17.12.2023 முதல் 22.12.2023 வரை பெய்த கனமழையின் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மாநகராட்சியின் தாழ்வான பகுதிகளில் உள்ள பொது மக்கள் சமுதாய கூடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாநகராட்சி வருவாய் துறை ஆகிய துறைகள் மூலம் பாதுகாக்கப்பட்டு வந்தனர். தாழ்வான பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினை தடுப்பதற்கு 400 Bags மணல் மூட்டைகள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 57 (7)ன் கீழ் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின் படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.41,000/-க்கு ஆணையாளர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கபட்டமைக்கும் அதனை தொடர்ந்து பணியினை மேற்கொண்டமைக்கு தொகை ரூ.38080/-ஐ M/s. S.Vellapandi &Co நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

மதிப்பீடு எண்:165/2023-24

**தீர்மானம் எண்: 338 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---